பதிவுஎண் 2041

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

தனிப்பிரதி விலை அணா ஒன்று



எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்,
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரு மிந்நாட்டு மன்னர் (பாரதி)

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். (குறள்)

மாலை க | குரோதன-ஸு புரட்டாசி-மீ உகூ-உ (11—10—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் உகூ
ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளிவரும்.

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்.

வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் நான்கு.



மகாத்மா காந்திக்கு ஜே.

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர் எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

செய்தித்திரட்டு,

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்வள் 11-ந்தேதி பாப்பாரப்பட்டிக்கும், 12 13-தேதிகளில் மாரண்டஹள்ளி பார்க்கவ குல மகா நாட்டுக்கும் செல்லுவார்.

*

பம்பாயில் ஆலைத் தொழில் நிறுத்தம் அப்படியே இருக்கிறது. சில ஆலைகளில் தொழிலாளருக்கு ரூபாய் 2 முதல் 10 வரையில செப்டம்பர் மாதத் தொகையிலிருந்து முன் பணமாகக் கொடுத்திருக்கிறார்களாம்.

*

இந்திய அரசாங்கத்தாரும் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தாரும செய்து கொள்ளப்போகும் கடிதப் போக்குவரத்து விஷயங்களில் இந்தியர்களைத் திரும்ப அனுப்பும் விஷயமும் சேர்க்கப்படுமானால் அதை தேச முழுமையும ஆட்சேபிக்கக்கூடுமென்றும், ஆதலால் இவ்விஷயத்தில், இந்திய அரசாங்கத்தார் எவ்விதமாகவாவது மத்யஸ்தம் செயதுகொள்ளுவதாயிருந்தால் முன்னமேயே பகிரங்கம் செய்ய வேண்டுமென்றும் இதற்கு பதில் தெருவிக்குமாறும் ஏகாதிபத்திய பிரஜா உரிமைச் சங்கத்தார் 1925 ம் வருஷம் செப்டம்பர் மாதம 23-ந்தேதி இந்திய அரசாங்கத்தாருக்குத் தந்தி கொடுத்தும் இன்னும் பதில கிடைக்கவில்லை.

*

காசியில் மகாத்மா பிறந்த நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 10000, மாணவர்கள் தேசியக்கொடிகளுடன், தேசிய கீதங்களைப் பாடிககொண்டு, காசி தோட்டத்திற்கு சென்றனர். அங்கு இவ்வளவு பிள்ளைகளுக்கும போஜனம அளிக்கபபட்டது. இத்துடன் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களுக்கு நியாயம வழங்கவேண்டிய அவசியத்தைப்பற்றி எழுதப்பட்டுள்ள ஒரு புத்தகத்தின் 3000 பிரதிகள் ஜாதி இந்துக்களிடையே விநியோகம செய்யப்பட்டன மேதாவிகள் பலர் காந்தி பெரியாரின் அருங்குணங்களை எடுத்துரைத்தார்கள்.

*

அலிகாரில் கிறிஸ்துமஸ் விடுமுறைநாட்களில் அகில இந்திய முஸ்லீம்லீக் கூட்டம் நடை பெறும.

*

தந்தி இலாகாவையும், தபால் இலாகாவையும ஒன்றாக்கிச் செய்யப்பட்ட சிலமாறுதல்களை இந்தியத்தந்தியிலாகா சங்கத்தார் பலமாகக் கண்டித்துச் சில தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றார்கள்

*

சோவியத்துப்பிரதிநிதிகள் ஜப்பானில் அதிகாரிகளால் தடுககப்பட்டதால் பிரதிநிதிகள் மாஸ்கோ திரும்பி விடுவார்கள். ஜப்பான் அரசாங்கத்தாரின் செயல் மாஸ்கோ அரசாங்கத்தாரால் கண்டிக்கப்படுகிறது.

*

சோவியத்து புரட்சி யுத்த சபையின் அங்கத்தினராக மீண்டும் டிராட்ஸிக்கி நியமனம் பெற்றதாக மாஸ்கோ செய்திகூறுகின்றதென டைம்ஸ் பத்திரிகையின் பெர்லின் நிருபர் அறிவிக்கிறார்.

*

கான்பூர் காங்கிரசின் தலைமை பதவிக்கு ஸ்ரீமதி. சரோஜனிதேவி தெரிந்தெடுக்கப்பட்டார்.

*

இம்மாதம் 18-ந்தேதியன்று சென்னை மாகாண கிராம உத்தியோகஸ்தர்களின் மகாநாடு ஒன்று சேலத்தில் முனிசிபல் கலாசாலைக் கட்டடத்தில் கூடும். கோயமுத்தூர், ஸ்ரீமான். சி. வி. வெங்கடரமண ஐயங்கார் தலைமை வகிப்பார். கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்கும் விஷயமாய் கவர்ன்மெண்டார் செய்துள்ள யோசனையைப் பற்றி அப்பொழுது கவனிக்கப்படும்.

*

தென் ஆப்பிரிக்காவில் இந்தியருக்கு விரோதமாகச் செய்யப்படும் சட்டத்தை கண்டிக்க இம்மாதம் 11-ந்தேதியன்று தேசமெங்கும் கூட்டங்கள் நடைபெற வேண்டுமென சரோஜனி தேவி கேட்டிருக்கின்றார்.

இலங்கை இந்திய வாசிகளுக்கு எச்சரிக்கை.

(போலி வேஷதாரிகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்)

ஐயன்மீர்!

இந்தியாவில் தமிழ்நாட்டினின்றும், தமிழ்நாடு காங்கிரஸ் கதர் அபிவிருத்திக்கென்றும், திருச்சி ஜில்லா காங்கிரஸ் கதர் அபிவிருத்திக்கென்றும், இலங்கையில் ஸ்ரீமான்கள் இராமசாமி பிள்ளை முருகேசம் பிள்ளை என்ற இருவரும் கதர் அபிவிருத்திக்காக பங்கு சேர்ப்பதாகவும் பங்கு ஒன்றுக்கு ரூ. 25/- வீதமாக வசூலிப்பதாகவும் இலங்கையிலும் ஓர் கதர் டிபோ வைக்கப் போவதாகவும் திருச்சி ஜில்லாக் கமிட்டியார் அனுமதி கொடுத்திருப்பதாகவும் அநேக தோட்டங்களில் கங்காணிகள் பணம் கொடுத்திருப்பதாகவும் அதன் உண்மையை அறியும் பொருட்டு பங்கு எடுத்துக்கொண்ட சில அபிமானிகள் இடமிருந்து பல கடிதங்கள் கிடைத்திருக்கின்றன. இங்கு விசாரித்த அளவில் திருச்சி ஜில்லாக் கமிட்டியிலிருந்தாவது அல்லது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்தாவது அதற்கு யாதொரு விதமான ஆதாரமும் இல்லையென தெரியவருவதால் ஷடியார்களிடம் யாரும் பொருள் உதவி செய்யாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். ஷடியார்கள் செய்து வருவது பெரும் மோசமான காரியமாகும். இனிமேல் ஷடியார்களுடைய வேடத்திற்கும் வாய் ஜலத்திற்கும் ஏமாந்துவிடாமலிருக்குமாறு எச்சரிக்கை செய்கிறேன்.

இப்படிக்கு,
பெ ம, வீரப்பன்,
திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி
காரியதரிசி.

"தெய்வீகன்"

தேசமுன்னேற்றத்தையும், பார்க்கவ குல நலத்தையும், பாஷாபிவிருத்தியும் நாடி பல பண்டிதர்களால் எழுதித்தரப் பெரும் அரிய கட்டுரைகள் மாதாந்தரத்தில் பொலிந்து கிடக்கும்.

பார்க்கவர்கட்கு வருட சந்தா
ரூ. 2—0—0
ஏனையோர்கட்கு வருட சந்தா
ரூ. 1-8-0

மாதிரிப்பிரதிவிலை அணு இரண்டு.

காரியஸ்தர்.
"தெய்வீகன்" பொன்மலை, திருச்சி

பெயர் பெற்ற ஊத்துக்குளி சுத்தக்கத்தர்.

50x16 குஞ்சம் அச்சில் நெசவு அழுத்தமும் நயமுள்ளதாயும் கதர்போர்டின் விலைக்கு விற்கப்படும். வேஷ்டி, துண்டு, காதி ஈரோமை கலர் வெள்ளைக் கோட்டிங் மற்ற எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலை விபரங்களுக்கு எழுதவும். அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

K. V. குப்புசாமி அய்யர்,
கதர் வியாபாரம், ஊத்துக்குளி, S. I. R.

"தேசோபகாரி"

பர்மாவில் விதேசி முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்.
45-36வது வீதி. ரங்கூன்.

மோதிரத்திலும் ஓர் ஆச்சரியம!

பாரிஸ் லேடிகளின் லீலாவிநோத போட்டோ மோதிரம்.

இம்மோதிரத்தின் ஆச்சரியம் யாதெனில், இதில் கடுகளவு பிரமாணம் துவாரம் உண்டு. அதின் மூலமாகப் பார்க்க அதில் பாரிஸ் தேசத்தின் பெண்மணிகளின் பலவித லீலைகளுடன் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருப்பதையும், இன்னும் பலவித ஆச்சரியங்களும் காணலாம்.

இதன் கிரயம் 1-க்கு ரூ. 1-4.

பாரீஸ் லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள்.

இவை பார்ப்போர் மனதுக்கு குதூகலத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும். பாரிஸ் தேச பெண்மணிகளின் ரூபலாவண்யமும், லீலா விநோதமும் இதில் காணலாம். பெட் ரூம்களில் வைப்பதற்கு இவை வெகு சுந்திரமாயிருக்கும்.

12-படங்கள் கொண்ட செட் 1-க்கு
விலை ரூபாய் 2.

ஓ. எம். வி. கம்பெனி.
(23-வது பீட்) மதராஸ்.

ஸ்ரீமான் ஆரியாவின் கண்விழிப்பு.

தீவிர காங்கிரஸ்காரரும் தேசத்திற்காக ஐந்து வருஷம் கடின காவல் தண்டனை அடைந்தவரும் ஆன ஸ்ரீமான் எஸ். பி. ஒய். சுரேந்திரநாத் ஆரியா **M. A. P. D. S. D. M** அவர்கள் தற்கால நிலைமையைப்பற்றி தெரிவிப்பதின் சாரமாவது:—

சென்னை மாகாணத்தில் பெருந்தலைவர்களான ஸ்ரீமான் **T. M.** நாயர், சர். பி. செட்டியாராகிய இருவர்களாலும் தோற்றுவிக்கப்பட்டதோர் பிராம்மணரல்லாதார் இயக்கமானது சில குறைகளை உடையதாயிருந்தாலும், பலகாங்கிரஸ்களும் சமுதாய சீர்திருத்தச் சங்கங்களும் செய்ய முடியாத காரியங்களை இது செய்து முடித்திருக்கிறது. பிராமணரல்லாதார் எல்லோரும் தாங்கள் ஒரு மனிதசமூகம் என்றுணரவும் அவர்களுக்கு சமூதாயத்தில் உள்ள கொடுமைகளை ஒழித்துக்கொள்ள கண் திறக்கவைத்ததும் பிராமணரல்லாதார் இயக்கமாகிய ஜஸ்டிஸ் கட்சிதானேயல்லாமல் வேறொரு கட்சியுமல்ல. இந்த ஒரு காரியத்திற்காகிலும் அதை ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லுவது பல வகையிலும் பொருத்தமுடையதாகும். அதன் விரோதிகள் அதை அது சுயநல பிராமணரல்லாதாரால் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லும்படி சூட்சி செய்து பொது ஜனங்களையும் அப்படியே நினைக்கும்படி செய்திருந்தாலும் பிராமணரல்லாதாருக்கு அவ்வியக்கம் கிடைத்தற்கரிய வரமென்றே சொல்லவேண்டும்:

ஸ்ரீமான் T. M. நாயர் அவர்கள் மரணமடையாதிருந்தால் இந்த ஜஸ்டிஸ் இயக்கம் இந்தியாவிலே ஜன சமூகத்திற்கு நன்மை செய்ய முதன்மையான இயக்கமாய் விளங்கும்.

ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசில் சேராததற்கு முக்கிய காரணம் காங்கிரஸ் அரசியல் கொள்கையில் அபிப்பிராய பேதமேற்பட்டதல்ல. ஆனால், காங்கிரசின் சமுதாய சமத்துவ கொள்கைகளில் நம்பிக்கையில்லாத காரணத்தால் தான்.

இந்தியாவின் விடுதலைக்கு வெறும் அரசியல் கொள்கை மட்டும் போதாது என்பதோடு சமூக சமத்துவ கொள்கைகளும் முக்கியமானதென்று புத்திமான்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். இதையே டாக்டர் T.M நாயர் அவர்களும் அடிக்கடி சொல்லியிருக்கிறார். டாக்டர் நாயருக்குள்ள முன் யோசனை சர். P.T. செட்டியாருக்கு உண்டென்று சொல்லமுடியாது. அப்படி உண்டாயிருக்குமானால் இந்தியாவிலேயே ஜஸ்டிஸ் இயக்கத்தை ஓர் பெரிய இயக்கமாகச் செய்திருக்கலாம்.

பிராமணர் ஆதிக்கம்.

பிராமணர்களின் தற்போதைய ஆதிக்கமானது அவர்களுடைய அரசியற் கொள்கைகளால் ஏற்பட்டதல்ல.

தங்களுக்கு அருகதையில்லாத சமுதாய சமய கொள்கைகளை வைத்துக்கொண்டு அதனால் தாங்கள் உயர்ந்தவர்கள் என்கிற தத்துவத்தை பொதுஜனங்களுக்கு ஊட்டி வைத்திருக்கிறபடியால் தாங்கள் மற்றவர்களைவிட பல துறைகளிலும் முன்னேற வசதி ஏற்பட்டு போய்விட்டது. இந்த ரகசியத்தைக் கவனித்து சமுதாயத்திலும் சமூகத்திலும் அவர்களுக்கு உள்ள உயர்ந்த தன்மையை ஒழிக்க, ஸ்ரீமான். செட்டியார் அவர்களும் மற்றும் உள்ள பிராமணரல்லாத தலைவர்களும் பாடுபட்டிருப்பார்களேயானால் அது பிராமணரல்லாதாருக்கு எவ்வளவோ நன்மையைச் செய்ததாயிருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் பிராமணர்களை நமது குருவாகவும் ஆசிரியராகவும் நம்மைவிட உயர்ந்தவர்களாகவும் வைத்துக்கொண்டு இருப்பதை அடியோடு மாற்றாமல் வேறு எவ்வித முயற்சியினாலும் பிராமணரல்லாதார் முன்னுக்கு வர முடியாது. இந்தக் காரியத்தை என்றைக்கு நாம் செய்து முடிக்கிறோமோ அன்றைக்குத் தான் பிராமணரல்லாதாரின் சுயமரியாதைகளை காப்பாற்றி மறைந்து கிடக்கும் சக்திகளை வெளிக்கிளப்பி விட்டவர்களாவோம்.

பிராமணர்கள், தங்கள் தந்திரத்தாலும் சூழ்ச்சியாலும் ஆங்கிலக்கல்வியாலும் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்வது ஒருபுறமிருந்தாலும், நமது சமுதாய வாழ்வில் நம்மைவிட அவர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லுவதுதான் அவர்கள் உயர்வுக்கு முக்கியமான காரணம்.

ஜஸ்டிஸ் இயக்கமானது தன் உரிமைகளையும் கொள்கைகளையும் வற்புறுத்துவதற்கு இடைஞ்சலாக பிராமணர்கள் அதன் நோக்கங்களை பிழைபடக்கூறி சூழ்ச்சி பிரசாரம் செய்ததால் பயந்து கொண்டு அரசாங்கத்தை அபயங் கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் அரசியலிலேயே முக்கிய கருத்துள்ள பிராமணரல்லாதார் அக்கட்சியில் சேர்வதற்கில்லாமல் போயிற்று.

பிராமணரல்லாதாருக்குள்ளாகவே சமூக சீர்திருத்தத்திலும் அரசியல் திருத்தத்திலும் கவலையுள்ள ஒருசாரார் இருந்தார்கள். அவர்கள் ஜஸ்டிஸ் குறைகளையும் காங்கிரஸ் பிராமணர்களின் சூழ்ச்சிகளையும் நன்கறிந்து கொண்டார்கள்.

பிராமணரல்லாத தீவிர காங்கிரஸ் வாதிகளைப்பற்றி பிராமணர்களும் என்ன தான் சொல்லிவந்த போதிலும் சரி, அவர்கள் தங்கள் கொள்கையைவிட்டு மாறப்போவதில்லை. பிராமணரல்லாத தலைவர்களில் இரண்டு அல்லது 3 பேர் இடம் எனக்கு அதிக மதிப்புண்டு பிராமணரல்லாத காங்கிரஸ் வாதிகளில் பலர் மிகத் திறமையும் சாதுர்யமும் ஊக்கமும் உடையவர்களிருக்கிறார்கள். அவர்களை மிகத்திறமைவாய்ந்த பிராமணர்களுக் கொப்பிட்டும் கூறலாம். ஆனபோதிலும் இவர்கள் தலையெடுக்காதபடி பிராமணர்கள் ஆழ்த்திவிடுவார்கள் என்று பயப்படுகிறேன். ஆனாலும் பிராமணரல்லாதார் ஆகிய நாங்கள் இரும்பைப்போன்ற மன உறுதியுடன் சமூகக் கேடுகளை களைந்தெறிய கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோம். இக்கெடுதி பிராமணரிடமிருந்தாலும் மேல் நாட்டாரிடமிருந்தாலும் இன்னும் யாரிடமிருந்தாலும் நாம் பயப்படப்போவதில்லை.

எங்களுடைய ஆயுதம் சத்தியமும் நீதியும் தைரியமும் தேசபக்தியும் சமூகபக்தியுமேயாகும். ஆனால் இவ்வேலையில் ஈடுபடும் பிராமணரல்லாதார், பிராமணர்களால் பொய்யையும், பழியையும் கொண்டு செய்யப்படும் பிராமணப் பிரசாரத்திற்கும் தங்களது பத்திரிகைகளில் தாங்களாகவும் சில பிராமணரலலாதார் என்ற பெயராலும் பொறுப்பற்ற சுய நலமுள்ள சில பிராமணர் அல்லாதார் பெயராலும் ஒரு நிருபர் என்ற பெயராலும் மற்றும் அரசியல் சூழ்ச்சியாலும் செய்யும் பிரசாரத்திற்கும், அதனால் ஏற்படும் சில துன்பங்களுக்கும், ஈடுகொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். ஆனால் பிராமணரல்லாதாரிலே எவ்வித பழிகளுக்கும் விஷமப் பிரசாரத்திற்கும் அஞ்சாது தங்களது கருமமே கண்ணாயிருந்து தூக்குக்கும், சிறைக்கும், உயிர் கொடுப்பதற்கும் பயப்படாத உண்மையான தலைவர்கள் இவற்றை செய்கையாலும் செய்து காட்டியிருக்கிறார்கள்.

நாம் யாரையும் பகைக்க வேண்டியதில்லை. நமக்கு எவரும் எதிரிகளுமல்ல. மற்றும் எந்தக்கக்ஷியையும் நாம் விரோதிக்கவுமில்லை. நம்முடைய கடமையெல்லாம் இப்பரத கண்டத்துக்கு சேவை செய்வதேயாகும். இத்துடன் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்காகவும் உழைக்க வேண்டியது அவசியம். பிராமணர்களின் தூற்றுதல்களினின்றும், தொந்தரவினின்றும் பிராமணரல்லாதாரைக் காப்பாற்றி, நமது முன்னணி வேலையில் சகல கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு, கடவுளுக்கும், தேசத்துக்கும், பிராமணரல்லாத சமூகத்துக்கும் உழைப்பேன் என நாம் ஒவ்வொருவரும் பிரதிக்ஞை செய்து கொள்ளவேண்டும். நான் இவ்வளவு கூறுவதால், பிராமணர்களுக்கு விரோதமாகச் செல்கின்றேனென எவரும் தப்பர்த்தம் பண்ணிக்கொள்ளலாகாது. பிராமணர்களிலும் மதிக்கத்தக்க நண்பர்கள் சிலர் எனக்குண்டு. ஆனால், பிராமணர், பிராமணரல்லாதாருக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டியாமலிருக்க முடியாது. பலர் கஷ்டப்பட அதன் பலனை வெகு சிலர் அனுபவிக்க, அநேகர் தியாகம் செய்ய அதன் மகிமையை ஒரு சிலர் அடைந்துகொள்ள, நேரிடும் விஷயத்தில் என் போன்றோர் தலையிட்டு வேண்டுவன செய்யவேண்டுமென்பதே எனது எண்ணமாகும். பிராமண சமூகத்தாரின் அதிக்ரமங்களையும் சுயநலத்துடன் செய்யப்படும் காரியங்களையும் நிர்த்தூளியாக்கும் வரை நான் சும்மாயிருக்கப் போவதில்லை.

என்னுடைய கக்ஷி இன்னதென்பதை வியக்தமாகக் கூறிவிட வேண்டியது என் கடமையாகும். நாங்கள் மகாத்மாவின் தலைமையை விரும்புவதுடன், அவருடைய உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளுகின்றோம். எங்களுக்குக் காங்கிரஸில் நம்பிக்கையுண்டு. சுயராஜ்யமே எங்களது நோக்கமாயிருப்பதுடன், அதனைப் பெறுவதற்கான திட்டங்களையும் ஒப்புக்கொள்ளுகிறோம். கதர், தீண்டாமை மதுவிலக்கு பாவற்றிலும் எங்களுக்குப் பூரண நம்பிக்

கையுண்டு. இவைகளுக்காக முழுமனதுடன் உழைக்கத் தயாராயிருக்கின்றோம். பிராமணரல்லாத சமூகமானது அரசியலுப விஷயத்திலும் இன்னும் மற்றும் ஒவ்வொரு முன்னேற்றமான துறையிலும் அபிவிருத்தியடைவதற்கு எத்தகைய சாதனங்களைக் கைக்கொள்ள வேண்டுமோ அவைகளைக் கைக்கொண்டு வேலை செய்யவேண்டுமென்பதே எங்களின் பிரதான நோக்கமாகும். இவைகளைச் செய்ய நாங்கள் முன்வரும்போது, அதிக இடையூறுகள் நேரிடுமென்பது எங்களுக்குத் தெரிந்ததே. பிராமணரின் ஏவுதலால் பத்திரிகைகள் பல எங்களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யலாம். சமீபத்தில் நடந்த முனிசிபல் தேர்தலில் பிராமணர்கள் செய்தது போன்று எங்களை இம்சிக்கவோ, அடிக்கவோ வேண்டும் ஏற்பாடுகள் நடைபெறலாம். எங்கள் உயிருக்கே உலைவைக்க பிராமணர்கள் கங்கணங்கட்டிக் கொள்ளுவார்களென்பதை இங்கு விரித்துக் கூற வேண்டியதில்லை. எனினும், இவைகளையெல்லாம் கண்டு நாங்கள் பயப்படப் போவதில்லை. எங்களுடைய நோக்கம், வேலை, எதுவோ அவைகளை மட்டும் கவனித்து குறித்த இடத்திற்கு வெற்றிக் கொடி பிடித்துச் செல்லுவோம். எங்களுடைய எல்லையைக் கண்டுபிடிக்கும் மட்டும் நாங்கள் அயர்ந்துவிடப் போவதில்லை. எமது எல்லையானது விடுதலையேயாகும். பிராமணரல்லாதாருக்கு விடுதலையை அளித்து அவர்கள் உன்னத வாழ்விலிருக்கச் செய்யவே நாங்கள் உழைப்போம்.

“ஜஸ்டிஸ்” கக்ஷியும் எங்களுடைய கக்ஷியும் ஒன்றாயிருந்து உழைக்கவேண்டுமென்பதே எனது ஆவல். ஜஸ்டிஸ் கக்ஷியானது பிராமணரல்லாத சமூகத்துக்கு என்னென்ன நன்மைகளைச் செய்யவேண்டுமென விரும்புகிறதோ, அந்தந்த நன்மைகளை எங்கள் கக்ஷியும் செய்ய விரும்புகிறது. இவைகளிரண்டும் ஒன்றுபட வேண்டுமானால், ஒன்றைபொன்று திட்டுவதையும், வீண் குதர்க்கமான செயல்களையும் விட்டுவிட வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்ஙனம் நடந்து கொண்டாலன்றி, உற்சாகமும், உண்மையும் குடிகொண்டுள்ள அநேக பிராமணரல்லாத ஊழியர்களை நாம் இழந்துவிட நேரிடும். நம்மில் திறமபடைக்கப் பெற்றுள்ளவர்கள் அநேகர் பிராமணர்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கு, நாமே காரணஸ்தர்களாய் இருக்கின்றோம். அவர்கள் மீண்டும் நமது இயக்கத்திற்கு வந்து உழைக்க வேண்டுமானால் நமக்குள் முதலாவதாக ஒற்றுமை ஏற்படுதல் அவசியம். ‘‘ஜஸ்டிஸ் கக்ஷியானது, வெகு சில பிராமணரல்லாத அதிகாரிகளின் நலத்திற்கென ஆக்கப்பட்டதாயிராமல், கதரை அபிவிருத்திசெய்யவும், மற்றும் ஒவ்வொரு விஷயத்திலும் எங்களுக்குதவி செய்யக்கூடிய கக்ஷியாக இருக்கவேண்டும். மேலும், இந்நாட்டிற்கு க்ஷேமத்தை அளிக்கவல்லதாகிய ராட்டினத்தின் மீது அக்கக்ஷி தன் முழுகவனத்தையும் செலுத்தி பொதுஜனங்களின் பிரீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்னும், நாம் செய்யவேண்டிய வேலை என்னவெனில், தொழிலாளருக்காக யாவரும் உழைக்க முந்திக்கொள்வதுடன், அவர்களுடைய சுகதுக்கங்களை நமதாகப் பாவித்து நடந்து கொள்ளல் நன்று. நாம் இங்ஙனம் ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்து செய்யாவிட்டால், பிராமணர்கள் வெகு எளிதாக இத்தொழிலாளரை ஏமாற்றி விடுகின்றனர். ஏழைகளுக்கும், தொழிலாளருக்கும் உழைப்பதே நமது கடமையென்பதை ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் மனதில் கொண்டு வேலை செய்வார்களானால், நமது வேலை சீக்கிரத்தில வெற்றிபெறும் என்பதில் சந்தேகமில்லை. முடிவாக நான் கூறவேண்டியது ஒன்றுண்டு. ஜஸ்டிஸ் கட்சியும், எங்கள் கட்சியும் ஒன்று சேருவது மட்டும் போதாது. எல்லாரும் காங்கிரசில் சேர்ந்து தக்க வேலை செய்யவேண்டும். காங்கிரசிலேயே பிராமணரல்லாரைத் தாழ்த்தி வைத்து, சுதந்திரங்கள் யாவையும் ஏகபோகமாக அநுபவிக்க எண்ணுபவர்களை தோற்கடிக்கவேண்டும். இப்பொழுது சென்னையிலுள்ள ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியானது முதலாளிகளின் ஆதீனத்தில் இருக்கிறது. அதனால், அக்கமிட்டியானது வேறுசில வழியில் சென்று வேலை செய்து கொண்டுவருகின்றது. நம்மில் பணக்காரர் அதிகமாயில்லாவிடினும், பெருந்தொகையினராயிருப்பவர்கள் பிராமணரல்லாதாரேயாகும். இக்கமிட்டிக்குள் நுழைந்து நாம் யாவரும் அங்கத்தினராக வேண்டும். “ஜஸ்டிஸ்” கட்சியார் இதை மறுப்பார்களானால், நாமாகவே தனிப்பட ஓர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியை மதராசில் ஸ்தாபித்து, கார்ப்பரேஷன் சட்டசபை, இந்தியா சட்டசபை யாவிலும் ஜெயம் பெற உழைக்கலாம்.

சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் எலெக்ஷனானது என் ஜீவியத்தில் ஓர் விதமாறுதலை உண்டாக்கி விட்டது. நாம் தோல்வியடைந்து விட்டோமென எண்ணி வருத்தப்பட வேண்டியதில்லை. இத்தோல்வியே நமக்கு உணர்ச்சியைக் கொடுத்ததென்று கூறலாம். நான் பிராமணர்களை முற்றிலும் நம்பி அவர்களுக்கென்று முன்னர் உழைத்தேன். இப்போதோ அதனால் ஏற்பட்ட பலனை பிரத்யக்ஷமாகக் காணலானேன். பிராமணர்களுடைய பேச்சைக்கேட்டுக்கொண்டு, சில பிராமணரல்லாத நண்பர்கள் முனிசிபல் தேர்தலின் போது “ஆரியாவுக்கு வெட்கம்” எனக்கூறினார்கள். இவர்கள் சுயமாகக்கூறாது, பிறருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு செய்ததால், நான் அவர்களுடைய பிசகை மனப்பூர்வமாய் மன்னித்து விடுகிறேன். இவர்களைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் நியாயம் பெற என் மனம் இடங்கொடுக்கவில்லை.

நான் சிறைக்குச் சென்றதும், அந்நிய நாடுகளுக்குப் பிரயாணமானதும், மற்றும் என் சகல வேலைகளும் பிராமணர்களுக்கென்றே செய்யப்பட்டது. நான் செய்த உதவிகளுக்கு அவர்கள் பிரதியுபகாரமாக என்ன செய்தார்களென்பதை, இங்கு கூற வேண்டுவதில்லை. குருகுல விஷயத்திலும் முனிசிபல் தேர்தலிலும், என்னை முறையற்ற வழியில் பிராமணப்பத்திரிகைகள் திட்டின. அச்சமூகத் தலைவர்களும் என்னைத் திட்டினார்கள். நான் இதுவரை பிராமணருக்கென்று உழைத்ததில பத்திலொருபங்குகூட பிராமணரல்லாதாருக்கென்று உழைத்திருக்கவில்லை. என்றாலும், இன்று முதல் பிராமணரல்லாதாருக்கென்று மட்டுமே உழைக்கத் தீர்மானித்து விட்டேன்.

எனக்குப் பக்கபலமாக என்னிலும் அதிகமாக இந்நாட்டுக்குச் சேவைசெய்யும் பிராமணரல்லாத பெரியோர் பலர் இருக்கின்றார்கள். தியாகி டாக்டர் வரதராஜலு நாயுடு இந்நாட்டின் விடுதலைக்கென்று பல கஷ்டங்களை மேற்கொண்டு அரிய தியாகம் செய்தவர். ஸ்ரீமான். ஈ.வெ. இராமசாமி நாயக்கரை இத்தேசம் நன்கறியும், அவருடைய தளர்ந்த வயதிலும், தேசசேவையையே பிரதானமாகக் கொண்டு உழைப்பதுடன் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்கென உழைக்கின்றார் அவரைக்கடவுள் காப்பாராக. இன்னுமொருவரைப்பற்றி இங்குகூற வேண்டியது அவசியமாயிருக்கின்றது. அவரே திரு. வி. கலியாணசுந்தர முதலியார். இவ தொழிலாளருக்காக மிகவும் உழைத்தவ உண்மை சந்நியாசியாக தம் வாழ்க்கை நடத்தி வருகின்றார். இவர்களைத்தவிர, இன்னும் பல உண்மையான பிராமணரல்லா ஊழியர்கள் உண்டு. இவர்கள் யாவரு ஒன்று சேர்ந்து உழைத்து, இந்நாட்டிற்கு பிராமணரல்லாத சமூகத்திற்கும் விடு யை அளிப்பார்களென்று நம்புகிறேன்.

கோபிசெட்டிபாளையம்

2-10-25 தேதியில் கோபிசெட்டிபாளைய தில் ஒரு கதர்கடை ஏற்படுத்துவதற்கு சந்தா வ லிக்க ஷை தாலூக்கா கொண்டயம்பாளையம் கிர மம் நானும முருகண கவுண்டரும் ராமசாமிக் கவுண்டரும் போனதில் ஸ்ரீமான் சுப் பிரமணிய கவுண்டர் சந்தா 100-0-0 ரூபாயும் கொடுத்தார்கள். ஷை ஊரில் பெரியதனவந் ரும் கதரில் ரொம்பவும் அபிமான முள்ளவரும கிய ஸ்ரீமான் C. K. மாரப்பகவுண்டரிடம் பே னதில் ரொம்ப அபிமானத்துடன் இந்த விஷய த்தில் ஆயிரக்கணக்காலும் சரி நூற்றுக்கணக்க லும் சரியென்று சந்தா 100-0-0 ரூபாய் கொ ப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் வீட் டில் வருகிற அர்ப்பசி மாதம் கல்யாணம் நடப் தாகதெரிந்து கல்யாணத்தில் எப்படியாவது தா கள் கதரே கல்யாணத்திற்கு உபயோகப்படுத் வேணுமென்று கேட்டுக்கொண்டதில் அப்ப யே செய்வதாக சொல்லியிருக்கிறார். மாப்பிள வீடு ஈரோடு தாலூகா கினாம்பாடி முத்துசா கவுண்டர். ஆகையால் ஷை தாலூகா காங்கிர ஊழியர்கள் யாராவது போய் அவசியம் அவ யும் கல்யாணத்திற்கு கதரையே உபயோகிக்கு படி கேட்டுக்கொள்ள வேணுமாய் கோருகிறே ன். பெரிய பணக்காரர் வீட்டுக்கல்யாணங்களு குகதர் உபயோகப்படுத்தினால் மற்றவர்களும் உ யோகப்படுத்த ஒரு வழி காட்டியிருக்குமென் நினைத்து எழுதலானேன். மகாத்மாவினுடை கதை செய்யும் ஸ்ரீமான் நாகை ராஜார பாகவதரை கல்யாணத்திற்கு தருவிக்கு படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

க. கிஞ்சப்ப கவுண்டர்

கிராமப்பிரசாரம்.

(சேலம், என். வெங்கட்ரமணன்.)

நமது இந்திய மக்களில் பெரும்பாலார் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். முற்காலத்தில் நமது நாட்டில் ஏற்பட்டிருந்த கிராமங்களின் அமைப்பும், ஒழுங்கும், நேர்மையும், நாகரீகமும் மிகப்பெருமைவாய்ந்திருந்ததென்பதைச் சரித்திரக்காரர்கள் எல்லோரும் புகழ்ந்து கூறுகிறார்கள். நமது இந்திய கிராம வாழ்க்கைச் சிதைவுற்ற காரணத்தாலேயே நம்நாடு மிகவும் வறுமையுற்றதென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். மக்கள் தம் வாழ்க்கை, தொழில், ஒழுக்கம், நீதி, கல்வி, அரசியல், அறிவு முதலிய வனைத்தும் கிராம அமைப்பின் கீழ் வளம்பெற்று வளர்ந்து வந்தன. ஒவ்வொரு கிராமமும் அக்காலத்தில் சுதந்தரம் பெற்ற ஓர் தனியரசாங்கமாக நடைபெற்று வந்ததென்பதையும், இக்காலத்தைப்போல் அதிகாரத்தாலன்றி அன்பாலேயே கிராமங்கள் ஒன்றுக்கொன்று பிணைப்புற்று வாழ்ந்து வந்தனவென்பதையும், ஒரு கிராமத்திய மக்கள் அயல் கிராமத்தாரின் உதவியைப் பெரும்பாலும் எதிர்பார்க்காமலேயே தம் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போகும் ஆற்றலுடையவராயிருந்தாரென்பதையும் எண்ணிப் பார்க்குமிடத்து நமக்குண்டாகும் சந்தோஷத்திற்களவில்லை. அத்தகைய சீரிய இந்திய வாழ்க்கைப் பல காரணங்களால் இற்றைக்குச் சீரும் சிறப்புங் குலைந்து பிளவுபட்டுத் தடுமாறி நிற்கிறதென்பதை அறியாதார் யார்? நமது நாடு ஒரு விவசாய நாடாதல் பற்றிப்பெரும்பான்மையான ஜனங்கள் விவசாயத்தைச் செய்துகொண்டு கிராமங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலாரான அம்மக்கள் முன்னிலையை யடைந்தாலன்றி நம் நாடு நன்னிலையை யடையமுடியாதென்பது நிச்சயம். தற்போது ஒரு கிராமத்தின் மக்களுக்கு அவர்தம் வாழ்க்கைக்கு வேண்டிய உப்பு முதல் உடை வரையிலும் தானியம் நீங்கலாக மற்றெல்லாப் பொருள்களும் துரைத்தனத்தாரின் தயவினால் அன்னிய இடங்களிலிருந்தே வரவேண்டியிருக்கின்றன. கிராமத்தில் ஓர் சிறு வழக்கு நேருமாயின் அதைத்தீர்த்து வைக்கக் கிராமப் பஞ்சாயத்தாராகிய பெரியோர்களில்லை. குடிகள் பெரும் பணத்தைக் கொட்டிக்கொடுத்து நகரங்களுக்குச்சென்று நன்றியற்ற வக்கீல்களின் வாசலிலும், தம் பாஷையறியாத நீதிபதிகளின் கோர்ட்டு வாசல்களிலும் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

தற்காலம் கிராமக்குடிகளிடையில் கல்வியறிவும், பிரபஞ்ச ஞானமும் குன்றியிருக்கிறது. அவர்கள் தம் குழந்தைகளுக்குத் தகுந்த கல்வி கற்பிக்கவும் தக்கவசதிகளில்லை. கிராமப் பாடசாலைகள் சில ஏற்பட்டுள்ளன வாயினும், முற்காலத்தைப்போல் சிறந்த பண்டிதர்களான உபாத்தியாயர்கள் கிடையாது. தமிழகத்தில் ஆரம்பப் பாடசாலைகளின் ஆசிரியர்களில் நூற்றுக்கு எண்பது பேருக்குமேல் தம் சுய பாஷையிலாயினும் பிழையின்றி எழுதப்படிக்கத் தெரிந்தவர்களில்லையென்று கூறுதற்கு அஞ்சவேண்டுவதில்லை. இத்தகைய உபாத்தியாயர்களிடத்திற் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு எத்தனை உலகியல் ஞானம் ஏற்படுமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இந்நிலையில் பாடசாலைகளில் கற்பிக்கப்படுங் கல்வியோ நாட்டுக்கும், சமயத்திற்கும், குடிகளின் தொழிலுக்கும் பயன்படாத கல்வியாக விருக்கிறது. கட்டாய ஆரம்பக்கல்வி முறை ஏற்பட்டால் பெருநன்மை ஏற்படுமென்று பலர் நம்புகின்றனர். தற்காலக்கல்வி முறையும், பாடசாலைகளின் அதிகார வர்க்கமும் முற்றும் நாட்டிற்கான பண்டைய முறையைத் தழுவி மாறுதப்பாட்டலன்றி, கட்டாயக்கல்வியால் கிராம வாசிகளுக்குப் பயனுண்டாகாதென்பதை வற்புறுத்திக் கூறுகிறோம். நமது கிராமங்களில் தற்காலத்தில் சுகாதாரக்கேடான பல குறைகள் தென்படுகின்றன. அவற்றை நீக்குவதற்கேற்ற அறிவு குடிகளுக்கில்லை. கல்வியறிவில்லாத காரணத்தாலும், சுயநலம் மிக்க சில வகுப்பாரது துர்போதனையாலும் கிராமக்குடிகளுக்கிடையில் பலவித மூட நம்பிக்கைகள் வேரூன்றிப்பரவி அவர்களைக் கெடுத்து வருகின்றன. இத்தகைய கிராமக் குடிகளினிடத்திலிருந்தே இந்திய துரைத்தனத்தாரின் வருமானத்தில் பெரும் பகுதி வசூலிக்கப்படுகிறது, துரைத்தனத்தாரால் நகரப்புறங்களில் நிறுவப்பெற்றுள்ள பெருங்கலாசாலைகளும், வைத்தியசாலைகளும், பிறவும் பெரும்பகுதியோரான கிராமக்குடிகளுக்குச் சிறிதும் பயன் படுவதில்லை. நகரப்புறங்களிலுள்ள ஒரு சிறும் பகுதியினருக்கே அவை பயன் படுகின்றன. இவ்விதம் உலகியலறியாத பேதைகளாக இந்திய கிராமவாசிகள் பெரிதும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் நாம் இந்தியாவுக்கு ஜனப்பொறுப்பாட்சி வேண்டுமென்று விரும்பி முயற்சி செய்கிறோம். அவ்வாட்சியை நேர்மையுற ஓட்டுகளைக்கொடுத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பி நடத்த வேண்டியவர்கள் பெரும்பாலும் கிராமக்குடிகளே யாவர். கிராமவாசிகள் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் வரையில் எத்தனை சீர்திருத்தங்கள் நமது நாட்டுக்கு வழங்கப்படினும், அவை சுயநலம் மிக்க படித்தவராகிய சிறு கூட்டத்தினரால் கவரப்பட்டு நாட்டுக்குத் தீமை விளையக்கூடுமென்பதைக் கவனிக்க வேண்டும், இதைக்குறித்தே, கிராமங்களைப்பற்றியும், ஏழைத்தொழிலாளரைப் பற்றியும், கவனிக்காமல் வக்கீல்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களின் கைகளில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த காங்கிரசை, நமது ஏழைகளின் இரக்ஷகர்—கைத்தொழிலாளரின் மித்திரர்—புராதன இந்தியாவின் புத்திரர்—மகாத்மா காந்தியவர்கள் ஏழை விவசாயிகளுடைய—தொழிலாளருடைய—பொது ஜனங்களுடைய காங்கிரசாக மாற்றியமைத்தார். இன்றல்லவா காங்கிரஸ் நமது கிராமங்களை நோக்க ஆரம்பித்தது. காங்கிரஸ் தொண்டர்கள் பலரும் பட்டணங்களிலும், அயல் தேசங்களிலும் சென்று பெருமையுடன் பிரசாரம் செய்வதை விட்டுக் கிராமங்களுக்குச்சென்று, ஏழை மக்களிடையில் நின்று, சாமான்ய கதருடைதரித்து, உண்மையுடனும், தியாக புத்தியுடனும் கௌரவத்தைக் கருதாது சாந்தமாகப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டதன் காரணமென்ன? சகோதர சகோதரிகளே! மகாத்மா அவர்களின் திட்டங்களை அயல் நாட்டு அரசியலறிவைக்கொண்டு ஆராயாதீர்கள். தீண்டாமை விலக்கல், கத்தரை வளர்த்தல், மதுவை யொழித்தல், நீதிமன்றங்களை வெறுத்தல், தற்காலக் கல்வி முறையைப் பொறுத்தல் முதலிய சீரிய நோக்கங்களை நம் நாடு எம்மட்டும் நிறைவேற்றுகிறதோ அதற்குத் தக்கபடிதான் நமது நாட்டின் விடுதலையும் சமீபிக்குமென்பதை உண்மையறிவைக்கொண்டு நடுநிலையோடு ஆராய்ந்தறிய முயலுங்கள். நகரப்புறங்களில் படித்த கூட்டத்தாருக்கு நியாயங்களை எடுத்துக்கூறித் தருக்கித்துக் கொண்டிருப்பதை விடுத்து. கிராமங்களுக்குச் சென்று ஏழைக் குடிகளுக்கிடையில் நாம் வேலை செய்யவேண்டும்.

தற்போது கிராமவாசிகளுக்கு முதற்கண் வேண்டியிருப்பது அறிவு வளர்ச்சியாம். தேச சரித்திரம், பூகோள சாஸ்திரம்; சுகாதாரம், விவசாயம், தொழில், சமூகம், அரசியல் இவைகளைப்பற்றிய அறிவு கிராமக் குடிகளுக்கு அத்தியாவசியமாகும். இரண்டு மூன்று ஆண்டுகளாகக் காங்கிரஸ் செய்து வந்த கிராமப்பிரசாரத்தின் பயனாக அரசியலறிவு ஓர் சிறிது, கிராமங்களில் பரவி வருகிறது. அதுபோல் மற்றைய விஷயங்களைப் பற்றிய அறிவும் முக்கியமாகும். அப்பொழுதே இந்தியக் குடிகள் தங்களுக்குள்ள சுதந்தரங்களைச் செவ்வையான வகையில் உபயோகித்து தேச நன்மைக்குத் துணைப்படுவார்கள். இவ்வித கிராமப் பிரசாரத்தின் அவசியத்தைக் கருதிச் சென்னையில் ஏற்பட்டுள்ள "கிராமக் கல்வி அபிவிருத்தி சேவா சங்கத்தைப்" பற்றியும், அதன் காரியக் கிரமங்களைப் பற்றியும் 16—8—25 தேதிய "குடி அரசின்" இதழில் "கிராமக்கல்வி" என்ற தலைப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது அவ்வித சங்கதிகளைக் காங்கிரஸ் சபைகளோடு ஒவ்வொரு ஜில்லாக்களிலும் ஏற்படுத்திக் கிராமப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டால் விரைவில் பெரு நன்மை உண்டாகும்.

கோபிதாலூக்கா சவண்டப்பூர் கிராம வாசிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

இந்தக் கிராமத்தில் ஒரு விக்கினேஸ்வரன் கோவில் கட்டுவதற்காக சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன் யோசித்த விஷயமானது தற்காலம் சுமார் ஒரு வருஷமாக வேலை நடந்துவருகிறது. இந்தக் கோவில் கட்டிமுடிக்க பவானி தாலூக்காவில் மேட்டூர் என்னுமிடத்தில் ஒரு அணைக்கட்டுக்கட்டி முடிவாகிறதோ அப்பொழுது இதுவும் கட்டி முடித்துவிடுவார்கள் போல் தோன்றுகிறது. இந்தக் கிராமத்தில் அநேக தனவந்தர்கள் இருந்துங்கூட இதை கவனிக்காமல் பின்தாங்குகிறார்கள். இனிமேலாவது கவனித்துப் பின்தாங்காமல் விக்கினேஸ்வரன் பேரில் அபிமானம் வைத்து அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உதவியைச் செய்து விக்கினேஸ்வரனை ஆதரித்து பெரும் பயனை அடைந்து வருமாறு எல்லாம் வல்ல இறைவன் கிருபை செய்வாராக, என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.



குடி அரசு.

அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குரோதன-ஹூ புரட்டாசி-மீ உகூ-உ

பாட்னாத் தீர்மானம்,

சென்ற மாதம் 22-ந்தேதி பாட்னாவில் கூடிய, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தையும், அதைப்பற்றி மகாத்மாவின் தனி அபிப்ராயத்தையும நிதானமாய் யோசனை செய்து பார்த்தோம். அவற்றுள் காணப்படும் தத்துவத்தை சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால், மகாத்மா காந்தி அவர்கள், காங்கிரஸை சுயராஜ்யக்கட்சியார் வசம் ஒப்படைத்துவிடவேண்டும் என்பதாக முடிவு செய்துகொண்டு, அந்தப்படியே ஒப்புவித்து விட்டாரென்று தான் சொல்ல வேண்டும்.

தீர்மானத்தின் சாரம், என்னவென்றால், நான்கணா கொடுத்தவர்களெல்லாம் காங்கிரஸ் மெம்பராகலாம். காங்கிரஸில் பதவி வேண்டியவர்கள், காங்கிரஸ் காரியசமயங்களில் கதர் கட்டிக்கொண்டிருக்கவேண்டும். சட்டசபை முதலிய தேர்தலுக்கு நிற்கிறவர்கள் சுயராஜ்யக் கட்சியாரின் தயவைப் பெறவேண்டும். இந்தத் தீர்மானத்தின்மேல், மகாத்மாவின் அபிப்ராயமோ, இதற்குச் சம்மத மில்லாதவர்கள் காங்கிரஸை விட்டு விலகிக்கொள்ள வேண்டுமேயல்லாமல், உள்ளே இருந்துகொண்டு சுயராஜ்யக் கட்சியின் வேலைகளுக்கு இடையூறாயிருக்கக் கூடாதென்பது தான். அத்துடன் பழைய நிலை ஒன்றும் மாறவில்லையென்றும், நிர்மாணத் திட்டம் பாதிக்கப்படவில்லையென்றும் கூறுகிறார். மற்ற விஷயங்களைப்பற்றி நாம் அதிக கவலைப்படாவிட்டாலும், நிர்மாணத் திட்டம் பாதிக்கப்படவில்லையென்பதை ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்துகின்றோம். ஏனெனில் பாட்னா காங்கிரஸின் அதிகாரத்தை சுயராஜ்யக் கட்சியார் கையில், முற்றிலும் ஒப்படைத்தாகிவிட்டது என காந்தியடிகளே அக்டோபர் 1-ந்தேதி "யௌவன இந்தியா"வில் கூறியிருக்கின்றார். சுயராஜ்யக் கட்சியாருக்கோ, நிர்மாண திட்டங்களாகிய கதரிலும், தீண்டாமையிலும் முழு நம்பிக்கையுமில்லை. இந்த நிலைமையில், நிர்மாணத் திட்டம் எப்படி பாதிக்கப்படவில்லையென்பது நமக்குப் புரியவில்லை. சுயராஜ்யக் கட்சியினரல்லாத காங்கிரஸ் வாதிகளுக்கோ, சுயராஜ்யக்கட்சி திட்டத்தில் நம்பிக்கையில்லை. இருந்தால் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்திருப்பார்கள். தங்களுக்கு நம்பிக்கையில்லாததும் தேச நன்மைக்கு ஏற்றதல்ல என்று நினைப்பதுமான திட்டத்தைத் தேசத்தில நடத்துவிப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுவதை, காங்கிரஸில் இருக்கவேண்டுமே என்னும் ஒரு காரியத்திற்காகச் சகித்துக் கொண்டிருப்பதைவிட, அதை எதிர்க்கவேண்டுமென்னும் அவசியமுள்ளவர்கள் காங்கிரஸை விட்டு வெளியில் போய் தங்கள் மனசாக்ஷிப்படி நடந்துகொள்ளலாமென மகான் சொல்லுவதை காங்கிரசும் ஒப்புக்கொள்ளுமானால் அப்படி செய்வது மேலாதென்றே நினைக்கின்றோம்.

அதற்கடுத்தாற்போல், நிர்மாணத் திட்டத்தில் ஒருபாகமாகிய கதரை உத்தேசித்து நூற்போர் சங்கம் ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பெரும்பாலும், மாறுதல் வேண்டாதாருக்கும், ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொள்ளுபவர்களுக்கும் தேசநன்மையை உத்தேசித்து அதிக திருப்தியைக் கொடுக்குமென்பதில ஆக்ஷேபணையில்லை. ஆனால், சுயராஜியக் கட்சியார் இதையாவது ஒழுங்கு பெற நடக்கவிடுவார்களாவென்பதுதான் நமது சந்தேகம். நூற்பதில் நம்பிக்கையில்லாதவர்களும் நூற்பதை கேவலமாக் கருதுபவர்களும் கதரில் நம்பிக்கையில்லாதவர்களும் உறுதி மொழியில் கையெழுத்திட்டு, உள்ளே வந்து புகுந்து, இதிலும், சிறிது, சிறிதாக மகாத்மாவை விட்டுக்கொடுத்துக் கொண்டே பேசச் சொல்லுவார்களோவென்று நாம் சந்தேகப்படாமலிருக்க முடியவில்லை.

கடைசியாக ஒருவார்த்தை. நூற்போர் சங்கம் எற்படுத்தியதால் நிர்மாணத்திட்டத்தில் ஒரு பாகமாகிய கதர் திட்டம் பாதிக்கப்படவில்லை என்று சொல்வதானாலும் தீண்டாமை விலக்குத் திட்டம் சுயராஜ்ய கட்சியார் கருத்துப்படியே தானே மறைந்து போய்விட்டது. பெல்காமில் மது விலக்கு மறைந்தது. பாட்னாவில் தீண்டாமை விலக்கு மறைந்தது, இனி கதரின் தலையெழுத்து எந்த ஊரில் முடியப்போகிறதோ தெரியவில்லை. ஆனாலும் சுயராஜ்ய கட்சியார் அதை ஒழிக்கவும் ஒரு ஊர் மனதில் வைத்துக்கொண்டு தான் இருப்பார்கள்.

தமிழ் நாட்டைப்பொறுத்தவரை நாம் செய்ய வேண்டியது என்னவென்பதை யோசிக்க வேண்டும். நம் நாட்டில் சுயராஜ்யக்கக்ஷியாரில்லாமல் காங்கிரஸ்காரருக்குள்ளேயே சுயராஜ்யக் கக்ஷியை ஆதரிக்கிறவர்களும், அதன் திட்டமானது தேசத்திற்குக் கெடுதியை விளைவிக்கக் கூடியதென்று நம்பி காங்கிரஸ் அதன் வழி செல்ல விடாமல் தடுத்து, உண்மையான வழியில் நிறுத்தவேண்டுமென்று அந்தரங்க சுத்தியுடன் வேலை செய்பவர்களுமிருக்கிறார்கள். இதில் யார் பெரும் பான்மையோர், சிறு பான்மையோர் என்பதைப்பற்றி சவலைப்படவேண்டியதில்லை. இவர்களிருவருக்கும் காங்கிரஸில் இடமிருக்கின்றதா? இல்லையா? இரண்டாவதவர்களுக்கு இடமில்லையென்ற தீர்மானம் ஏற்பட்டால் அவர்கள் என்ன செய்யவேண்டியது என்பதைப் பற்றியும் அல்லது தனிச் சங்கமொன்று கண்டு அதன் மூலமாக உண்மை ஒத்துழையாமை திட்டத்தையும், நிர்மாணத் திட்டத்தையு[ம்] நிறைவேற்ற முயற்சி செய்வதா என்கிற வி[ஷ]யத்தைப்பற்றியும், கஞ்சீவரம் மகா நாட்டிலும், கான்பூர் காங்கிரசிலுமே நாம் முடிவு செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இது விஷயத்தை தமிழ் நாட்டிலுள்ள தேசிய வாதிகளும், தேசத்தொண்டர் ஆழ்ந்து யோசித்து ஓர் முடிவுக்கு வர[வே]ண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

லாலாஜி அவர்களும் தமது 'பீபிள்" ப[த்]திரிகையில் பாட்னா தீர்மானங்களை ஆக்ஷே[]பித்து விரிவாக எழுதியிருக்கின்றனர்.

ஆரியாவின் அபிப்ராயம்.

ஸ்ரீமான். சுரேந்திரநாத் ஆரியாவை [வா]சகர்கள் நன்கறிவார்கள். இவர் உத்தம தேசாபிமானி. அரிய தியாகம் பல நம் நாட்டிற்கென்று செய்தவர். இவர் சமீபத்தில், சென்னை "ஜஸ்டீஸ்" பத்திரிகையின் நிருப[]ருக்குப் பேட்டி கொடுத்து தம் அபிப்ராய[]த்தை வியக்தமாகக் கூறியிருக்கின்றார். இ[]தன் சாராம்சத்தை வாசகர்கள் நமது பத்திரிகையின் வேறொரு பக்கத்தில் காணலாம். பிராமணரல்லாதாரின் இப்போதுள்ள தற்கால நிலைமை எதுவோ, இனி நாம் செய்யவேண்டிய வேலை என்னவுண்டோ, அவைகளை நன்றாய் ஆராய்ச்சி செய்து தீர்க்கதரிசன[]த்துடன் ஸ்ரீமான் ஆரியா அவர்கள் கூறியி[]ருப்பதை நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் கவனிக்க வேண்டு[]மெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

• வைதிகப் பிராமணர்கள், ஜாதிச் செருக்குக்கொண்டு, மத விஷயத்திலும், தேசிய பிராமணர்கள், அரசியலிலும் பிராமணரல்லாதாரை தாழ்த்திவைத்து, பொய்ப் பிரசாரம் செய்வதையும், இதில் தங்கள் காரியம் வெற்றி பெருவதற்கு அநுசரணையாக, இரண்டொரு பிராமணரல்லாதாரை சேர்த்துக்கொள்வதையும், நாம் வன்மையுடன் பலதடவைகளில் கண்டித்து வருகின்றோம்.

கடவுளால் படைக்கப் பெற்றுள்ள மாந்தரில் ஒருசாரார் மட்டும் ஏகபோகமாக சுதந்தரங்களை அனுபவித்துக்கொண்டு, பிறரைதாழ்த்தி மோசமான நிலைமையில் வைத்திருப்பதைக் காண, ரோஷமுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் மனம் ஏன் துடியாது?

ஸ்ரீமான். ஆரியா, பிராமணருக்காக உழைத்து, பெற்ற பலனை நன்கு கூறியிருக்கின்றார். நன்றி கெட்டவர்களும், ஜாதிக்கர்வம் படைத்தவர்களும், தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள இழிவான முறைகளைக் கைக்கொள்ள சற்றேனும் பின் வாங்காதவர்களுமான, சில தேசிய பிராமணரை ஆரியா போன்ற அநேகர் நம்பி மோசம் போனது பிரத்தியக்ஷம்.

“இக்கொடுமைகளை உணர்ந்தே டாக்டர். நாயர் அவர்கள், ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்தனர். அக்கட்சியானது, இதுவரையிலும் எவ்வித வேலை செய்து கொண்டிருந்தபோதிலும் சரியே. இனிமேலும் ஓர் கட்டுப்பாடான முறையைக் கொண்டு, தேசிய பிராமணரல்லாதாருடன் சேர்ந்து இந்நாட்டின் க்ஷேமத்திற்கென்றும், பிராமணரல்லாதாரின் விடுதலைக்கென்றும், உழைக்க வேண்டுமென” ஆரியா அவர்கள் கூறியிருப்பதை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம்.

ஜஸ்டிஸ் கக்ஷியானது அதிகாரிவர்க்கத்தாரை ஆதரிக்கும் கக்ஷியாகவே இராமல் பிராமணரல்லாதாரின் க்ஷேமத்துக்கென்று உழைக்கக்கூடியதாயுமிருப்பதுடன் முற்றிலும் தேசிய மயமாகப்படவேண்டும். அதற்காக காங்கிரஸில பிராமணரல்லாதார் எல்லாரும் சேர்ந்து, சுயநலப் பற்றுடன் செய்யும் சூழ்ச்சிகளை ஒழிக்க வேண்டியது மிகவும் அவசியம். மகாத்மாவின் நிர்மாண ங்களாகிய கதர், மது விலக்கு, தீண்டாமை, ட்டினம் முதலியவைகளில் தீவிர முன்னேற்றமடைவார்களானால் அன்றே பிராமணர்களின் ஆதிக்கம் அடங்கிவிடுமென ஆரியா அவர்கள் கூறுவதை நாம் ஒப்புக்கொள்கிறோம்.

அன்றியும், பிராமணரல்லாதார் ஒரு விஷயத்தை நன்றாய்க் கவனிக்கவேண்டும். அதாவது ஜஸ்டிஸ் கட்சி என்று சொன்னால், திடீரென்று நம் மனதில் ஓர்வித வெறுப்பை உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். அக்கட்சி என்ன பாவத்தைச் செய்துவிட்டது? சர்க்காரோடு ஒத்துழைப்பதே ஓர் பெரிய பாவமென்று சொல்லுவோமானால் பிராமணர்கள், தங்களுக்குள் சர்க்காருடன் ஒத்துழைக்கும் மிதவாதிகளிடமும் மிதவாதகக்ஷியிடமும் அவ்வளவு வெறுப்புக் கொள்ளுகின்றார்கள்? மிதவாத பிராமணர்களும், தேசிய பிராமணர்களும், மாறுதல் வேண்டாத ஒத்துழையாத பிராமணர்களும், ஒத்துழைப்பையும், உத்தியோகத்தையும் இரகசியமாக விரும்பிக்கொண்டு, காங்கிரசை அதற்காக உபயோகப்படுத்திக்கொள்ளும் சுயராஜ்யக் கக்ஷி பிராமணர்களும் தங்கள் பிராமணாதிக்கம் நிலைபெறுவதற்காக வேண்டி, வர்ணாசிரம தர்ம சபை என்ற ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு எல்லா பிராமணர்களும் ஒன்றாய்க் கலந்து வேலை செய்ய வில்லையா? தங்கள் ஜாதி நன்மையின் பொருட்டு ஸ்ரீமான்கள். ரங்காச்சாரியாரும், எம். கே. ஆச்சாரியாரும். ஸர். பி. எஸ். சிவசாமி ஐயரும், மகா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளும், ஸ்ரீமான்கள். சத்தியமூர்த்தி, ஸி. பி. இராமசாமி ஐயர், எ. ரங்கசாமி அய்யங்கார், சக்ரவர்த்தி ஐயங்கார் முதலியோரும் ஒன்றுகூடிப் பேசுவதில்லையா? ஸ்ரீமான். ரெங்காச்சாரியார் சர்க்காருக்கு அனுகூலமாய் இருந்து கொண்டு தன் பிள்ளைகளுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்துக் கொண்டாரென்றாவது, ஸ்ரீமான். எ. ரெங்கசாமி ஐயங்கார் ஒத்துழையாமையை ஒழித்து விடப்பாடுபட்டதின் பலனாக தன் மகனுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்தாரென்றாவது இருவர்களையும் எந்த ராஜீய சபையாவது தள்ளிவைத்து விட்டதா? இவைகளைப் பார்த்தாவது, பிராமணரல்லாதாருக்குப் புத்தி வரவேண்டாமா? எந்த பிராமணனாவது எந்த சந்தர்ப்பத்திலாவது ஓர் பிராமணன் மீது குற்றத்தைச் சொல்லவோ, அவன் ராஜீய அபிப்ராயத்தில் தப்பு வியாக்கியானம் செய்யவோ, ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கவோ ஒருவருக்கொருவர் விரோதமான பிரசாரம் செய்யவோ முதலிய தங்கள் சமூகத்தாருக்கு விரோதமான காரியங்களைச் செய்கின்றார்களா? பிராமணரல்லாதாரிடம் கூலிபெற்று பிராமணர்களை வைகிறார்களா? இவற்றையெல்லாம், பிராமண நல்லாதார் கொஞ்சமும் கவனிப்பதேயில்லை. நாமும் ஏன் அம்மாதிரியான, நமது சமூக முன்னேற்றத்திற்கென்று, அரசியல் வித்தியாசங்களைக்கவனியாமல், ஒன்று பட்டிருக்கக்கூடாது.? பெரும்பாலும், பிராமணர்கள், சில பிராமணரல்லாதாரைத் தாங்கள் வசப்படுத்திக் கொண்டு அவர்கள் கையைக்கொண்டே, ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களின் கண்ணைக் குத்தச் செய்து ஜஸ்டிஸ் கக்ஷியென்றால் தீண்டாத வகுப்பைவிட கேவலமானது என எண்ணும்படி செய்துவிட்டார்கள். அரசியல் முன்னேற்றத்திற்கு ஒத்துழையாமை அன்றி வேறொரு சாதனத்தால் பலனில்லையோ, அதுபோல் சமூக முன்னேற்றத்திற்கு, பிராமணரல்லாதார் ஏதாவது செய்யவேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியின் ஒத்துழைப்பில்லாமல், ஒரு காரியமும் செய்ய முடியாது. காங்கிரஸ்காரர்கள், சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டதாகவும், ஜெயிலுக்குப் போனதாகவும் சொல்லிக்கொண்ட போதிலும், உண்மையில் ஜஸ்டிஸ் கட்சியே சமூக முன்னேற்றத்தில் கண் விழிப்புக்கான வேலைகளைச் செய்திருக்கிறது.

ஆனாலும் சுயராஜ்யக் கட்சியினிடமிருக்கும் குற்றங்கள், ஜஸ்டிஸ் கட்சியில் இல்லையென்று சொல்ல முடியாது. சுயராஜ்யக் கட்சியார், தந்திரமாகவும், மறைவாகவும் சூழ்ச்சியாகவும் செய்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் வெளிப்படையாகச் செய்கிறார்கள். ஆகலால் அரசியல் விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியார், காங்கிரஸ்காரர்களின் ஒத்துழைப்பை விரும்புவார்களானால் தங்களுக்கும், சர்க்காருக்குமுள்ள சம்மந்தங்களில் சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சுயராஜ்யக்கட்சியைவிட, ஜஸ்டிஸ் கட்சியார் மோசமில்லையென்று சொல்வதினாலேயே அதன் அரசியல் கொள்கைகளை நம் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ள முடியாது. சுயராஜ்யக் கட்சி அரசியல் கொள்கையை நாம் வெறுப்பதுபோலவே இதையும் வெறுப்பதாயிருந்தாலும் பிராமணரல்லர்தார் சுயராஜ்யக் கட்சியாயிருந்த போதிலும், ஒத்துழையாக் கக்ஷியாயிருந்த போதிலும், இரண்டுக்கும் மத்தியிலுள்ள வௌவால் கக்ஷியாயிருந்த போதிலும் சமூக முன்னேற்றத்திற்காக ஜஸ்டிஸ் கக்ஷியைப்பலப்படுத்துவதில் யாரும் பின்வாங்கவே கூடாது. எப்படி சில தேசிய பிராமணரல்லாதார் அரசியல் விஷயத்தில் சுயராஜ்யக்கட்சிதான் சர்க்காரை எதிர்க்கிறது, என்பதாகக் கூறிக்கொண்டு சுயராஜ்யக்கட்சியாரை ஆதரிப்பது தங்கள் கடமையென்றுச் சொல்லுகிறார்களோ அது போலவே ஜஸ்டிஸ் கட்சிதான் பிராமணரல்லாதாரின் நன்மைக்காக வேலை செய்கிறது என்று சமூக முன்னேற்றத்தை உத்தேசித்து அதை ஆதரிக்கவேண்டியது நம்முடைய கடமையென்று ஒவ்வொருவரும் எண்ண வேண்டும். சமூகவியலும் அரசியலும் ஒன்றுக்கொன்று அதிகதாரதம்மியமுடையதல்ல. மனிதனுக்கு எப்படி இரண்டு கைகளும் அவசியமோ அது போலவே ஓர் நாட்டுக்கும் சமூக முன்னேற்றமும் அரசியலும் முக்கியமானதுதான். அதிலும் தமிழ்நாட்டிற்கு அரசியலைவிட சமூகமுன்னேற்றம் முதலாவதானது. இவற்றைக் கவனியாமல் வெறும் அரசியல் அரசியலென்று கூறிக்கொண்டு பிராமணர்களின் பின்னால் திரிந்து கொண்டு பெருமை பெற்றதின் பலன், இன்றைத்தினமும், பிராமணரல்லாதார் சூத்திரரென்றும் பஞ்சமரென்றும் பார்க்கக் கூடாதவரென்றும் தீண்டக் கூடாதவரென்றும் தெருவில் நடக்கக்கூடாதவரென்றும் சொல்லத் தகுந்த இழிவான நிலைமையில் இருந்து கொண்டிருப்பதோடல்லாமல், ஸ்ரீமான்கள் ஆரியா கல்யாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கரவர்களை காங்கிரசிலிருந்து வெளிப்போக்க வேண்டியதவசியமாய்விட்டது. இக்கொடுமைகள் நம் நாட்டிலிருந்து ஒழிந்து, நாமும் பிராமணர்களென்போரும், பஞ்சமர்களென்போரும், கிறிஸ்தவர்கள், முகமதியர்களென்போரும் சகோதரர்கள், நம்மில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வில்லை. நாம் எல்லாரும் சமம் என்கிற உணர்ச்சி ஏற்படவேண்டுமானால் பிராமணரல்லாதார் எல்லோரும் ஒன்றுகூடி தங்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபடும்படியான ஓர் பிராமணரல்லாதார் சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டியதோடு தங்கள் முன்னேற்றத்துக்காக உழைக்கான எழுத்துக்களை ஒற்றுமையுடன் தெரிவிப்பதற்கும் பிராமணர்கள் இடம் துவேஷமில்லாமல் கட்டுப்பாடாய் பிரசாரம் செய்வதற்கும் ஓர் பிராமணரல்லாதார் பத்திரிகையும் சங்கமும் காலதாமதமில்லாமல் உடனே ஏற்பாடு செய்யவேண்டியது பிராமணரல்லாத அறிவாளிகளுடையவும். தலைவர்களென்று சொல்லப்படுவோருடையவும் முக்கியமான கடமையென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

கிராமசுகாதாரம்.

(காசியப்பர் மொழிபெயர்த்தது)

பூஜ்யர் சி. எப். ஆண்ட்ரூஸ் கிராம சுகாதார விஷயமாய் விடுத்துள்ள கேள்விக்கு மகாத்மாவின் பதில்:—

பரிசுத்தத்தின் விஷயமாய் நம்முடைய நியமங்கள் அதிக சிரேஷ்டமானவை. ஸ்நானம் எப்பொழுதும் அவசியம் செய்யவேண்டும். ஆனால் இவ்வெல்லாக்காரியங்களின் ரகசியத்தை நாம் அறிகிறதில்லை. இதனால் இது ஒரு மாமூல் என்ற வழக்கமாக நின்றுவிடுகிறது. எப்படியாவது கொஞ்சம் ஜலத்தைத் தொட்டுக்கொள்வதால் (ஜலத்தில் முழுகுவதால்) நாம் பரிசுத்தமடைந்து ஸ்வர்க்கம் செல்ல அதிகாரம் பெறுகிறோம் என்று நாம் நினைக்கிறோம். சுத்தமான ஜலத்தில் ஸ்நானம் செய்வது அதிக குணம் உண்டாக்கக்கூடியது என்று நவீன சாஸ்திரம் நமக்குத் தெரிவிக்கிறது. கேவலம் ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு அழுக்குவேஷ்டியைக் கட்டிக்கொள்வதால் பரிசுத்தம் உண்டாகாது. நம்முடைய (பாய்க்காருக்களோ) கக்கூசுகள் இப்புவியில் உள்ள நரகங்களின் இருப்பிடம்போல் இருக்கின்றன. அவைகளில் உட்காருவது பாபமான காரியம். உழைப்பினால், கொஞ்சம் யோசனையினால், விவேகத்தினால் நாம் அவைகளை திருத்தி அமைக்க முடியும் அதில் செலவு ஆகும் என்ற கேள்வியும் கிடையாது. கேவலம் பக்தியின் அவசியமே வேண்டும். ஏழைகளுக்குள் ஏழைகள் கூட இஷ்டப்பட்டால் பரிசுத்தத்தின நியமங்களைத்தழுவி நடக்கக்கூடும். ஆம், அவர்களுக்கு தங்களுடைய மலங்களை பார்க்க அல்லது சுத்தம் செய்ய அருவை உண்டாக்கக்கூடாது. வேளாண்மை செய்பவர்களுக்கு இவ்வருவை இல்லை குடியானவர்களோ அதிக துர்கந்தமுள்ள குப்பைகளையும் வண்டியில் நிரப்புகிறார்கள். ஆமதபாத், கான்பூர் முதலிய பட்டணங்களில் இருக்கும் துர்க்கந்தத்திற்குக் காரணம் ஏழைகள் அல்ல, ஆனால் சோம்பேறித்தனமான அறியாமையும் சோம்பேறித்தனமுமே. மதராஸிலோ சாவுக்கார்ப்பேட்டையில் ஐம்பது வயதுள்ள தனிகர் ஒருவர் பாதையில் அதிகாலையில் மலங்கழித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். இக்காட்சியை நான் நினைக்கும்போது மயிர் சிலிர்க்கிறது. ஹரித்துவாரத்தில் பரிசுத்தமான கங்கைக் கரையில் காலை மாலைகளில் யாத்திரை ஜனங்கள் அசுசி செய்கிறார்கள். அங்கே உட்காருவதாவது போவதாவது முடியாத காரியமாகவிருக்கிறது. சிலர் நதியின் எவ்வளவோ இடங்களுக்குப் போயும் போனபடியே திரும்புகிறார்கள். சிலஇடத்தில் ஜலம் கூட மொண்டு செல்வதில்லை. திருச்சிராப்பள்ளியில் நதியிலேயே இவ்விதம் மலத்தைக் கண்களினாலே பார்க்கக்கூடும். மற்றும் இதே ஜலத்தில் ஸ்நானம் செய்கிறார்கள். வங்காளத்தின் குளம் குட்டைகள் ஸ்நானம் செய்ய துணிகள் துவைக்க, மலங்கழித்து சுத்தி செய்து கொள்ள மற்றும் குடிக்க ஆகிய எல்லாவற்றிற்கும் உபயோகப்படுகிறது. ஆனால் ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் அவர்களின் (பிராது) பிரியாதோ இன்னும் ஒன்று இருக்கிறது. அவர் சொல்லுவதாவது "வட இந்தியாவில் குடியானவர்கள் எங்கே வேண்டுமானாலும் மலங்கழித்து பூமியை அசுசி செய்கிறார்கள். அதன்மேல் மழை பெய்கிறது. மேலும் அந்த மலம் ஜலத்தில் கலந்து கொள்கிறது லக்ஷக்கணக்கான ஜனங்கள் வெறுங்காலுடன் நடக்கிறார்கள். விஷப்பூச்சிகளால் வயிற்றுவலி முதலிய ரோகங்கள் உண்டாகின்றன. கணக்கற்ற ஜனங்கள் துன்பமடைகிறார்கள். தொத்துவியாதிகளால் கணக்கற்ற மரணங்கள் ஏற்படுகின்றன. இந்த மலத்தை எருவாகச் செய்யக்கூடும். சீனதேசத்து ஜனங்கள் அதை எருவாக்கி கோடிக்கணக்கான ரூபாய்கள் சேர்க்கிறார்கள். இந்தியர்களும் ஏன் அவ்விதம் சேர்ப்பிப்பதோடு ஆரோக்கியமாகவும் இருக்கக்கூடாது? தென் அமெரிக்காவிலும் இந்தியாவில் தற்காலம் இருக்கும் நிலைமை போல் இருந்தது, ஆனால் சரியான உழைப்பினால இருபது வருஷங்களில் அமெரிக்கர்கள் அந்நிலைமையை மாற்றி அனேக ரோகங்களிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்."

இந்தியா முழுதும் தொத்துவியாதிகளால் ஏற்படுகிற மரண அபாயங்களிலிருந்து ஜனங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால், தென் அமெரிக்கர்களைப்போல விடா முயற்சியுடன் சுகாதார பிரசாரம் செய்ய வேண்டும். இந்திய கிராமங்களில் அசுத்தங்களை அப்புறப்படுத்த சில உபாயங்களை இனி ஆராய்வோம்.

சுகாதார உணர்ச்சியே இல்லாமல், நினைத்த இடமெல்லாம் மலங்கழிக்கும் வழக்கத்தை ஜனங்கள் விட்டுவிடவேண்டும். பட்டணங்களில் அல்லது கிராமங்களில் அதற்கென்று ஏற்பட்ட இடங்களில் மாத்திரம் மலங்கழிக்கும் வழக்கம் நமக்குள் ஏற்படவேண்டும். தற்போதைய நம்முடைய வழக்கம் இதற்கு விரோதமாக விருக்கிறது. இது மாத்திரமல்ல, வீட்டின் முற்றத்தையும் அல்லது பாதையையும் அசுசி செய்வதில் ஜனங்கள் கொஞ்சமும் தயங்குவதில்லை அதனால் துர்நாற்றம் எங்கும் வீசுகிறது காற்று கெட்டுப்போகிறது. முற்றத்தில் அல்லது பாதையில் வெறுங்காலுடன் நடப்பது கஷ்டமாயிருக்கிறது. கிராமங்களில் ஏதோ ஒரு பூமியை அதற்காக வென்றேற்படுத்தி அங்கேயே அல்லது காடுகளிலேயே மலங்கழிக்கவேண்டும். மலங்கழித்தான பிறகு ஒவ்வொருவரும் அதன்மேல் மண்ணைப்போடவேண்டும். இப்படி செய்வதற்கு மேலான வழி இருக்கிறது. கோடாலி அல்லது மண்வெட்டியால் பூமியை வெட்டி. பள்ளத்தில் மலங்கழித்துவிட்டு எடுத்தமண்ணால் அக்குழியை நிரப்புதல். மேலும் இப்படிப்பட்ட இடங்களில் சில குறிப்புகள் ஞாபகார்த்தம் ஏற்படுத்தினால் எல்லாரும் தெரிந்துகொள்ளக்கூடும். ஜனங்கள் இதையறிந்து இவ்வேற்பாட்டிற்கனுகூலமாயிருந்தால் ஒரு செலவுமில்லாமல் சீக்கிரமாகவே இக்காரியம் முடியக்கூடும். நிஜம்சொல்லப்போனால் உழைப்பில்லாமல் ஜனங்களுடைய செல்வம் விருத்தியடைவதுடன் அவர்கள் ஆரோக்கியமும் மேன்மைப்படும். எந்த காட்டில் மலங்கழிக்கப்படுமோ அதின் விளைவும் அதிகப்படும். இது எல்லா ஜனங்களின் அனுபவம். ஜனங்கள் இந்த யோசனையின் உபயோகத்தை அறிந்து கொள்ளாமல் தங்கள் பூமியை இவ்வித உபயோகம் செய்யாமல் வீணாய் பணம் செலவிடுகிறார்கள். இவ்விதம் மற்ற தேசங்களில் செய்கிறார்கள். நம்முடைய தேசத்திலும் எவ்வளவோ இடங்களில் குடியானவர்கள் கிராமங்களின் மலத்தைக் கொண்டுபோகக்கூடாதென்று எடுப்பதை நாம்காண்கிறோம். ஆனால் பார்க்கும்போதே அருவை உண்டாகும் விதமாய் எடுத்துக்கொண்டு போகிறார்கள். என்னுடைய உபாயம் கையாளப்பட்டால் மலத்தைக் கொண்டுபோகும் விதம் முன்போலில்லாமல் காற்றும் கெடாமல் கிராமமும் சுத்தமாய் வைக்கப்படலாம். இதுவே கிராமத்தின் விஷயம். பட்டணங்களில் அவ்விதம் இருக்க முடியாது. பட்டணங்களிலோ கக்கூசுகள் இருக்க வேண்டும். மேல்நாட்டார்போல் கக்கூசுகள் வைத்து மலங்களையெல்லாம் குழாயின் மூலமாக ஓரிடத்தில் சேர்க்கப்படும் இடங்களை பற்றி இவ்விடம் விசாரணை செய்வது பிரயோசனமில்லை. ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே எப்படி சுத்தம் செய்யக்கூடும் என்பது தான் நாம் இங்கே விசாரிக்கவேண்டியது. ஜனங்கள் கீழ்கண்ட நியமங்களை அக்கரையுடன் ஒழுகவேண்டும்.

1. ஜலமலங்கள் அதற்கென்று நியமிக்கப்பட்ட இடங்களில் தான் கழிக்கப்படவேண்டும்.

2. பாதைகளில் மூத்திரம் கழிவது கூட கெடுதல் என்று அறியவேண்டும்.

3. மூத்திரம் கழிக்கும் இடங்களில் கழித்தபின் அதனை உலர்ந்த மண்ணால் மூட வேண்டும்.

4. கக்கூசுகள் சுத்தமாக விருக்க வேண்டும். ஜலம் விழும் இடங்கள் சுத்தமாக விருக்கவேண்டும். நம்முடைய கக்கூசுகள் நம்மை நிந்தனை செய்கின்றன பரிசுத்தத்தின் நியமங்களின் பங்கத்தை காண்பிக்கிறது.

மலங்கள் எல்லாம் கழனிகளுக்குப் போகவேண்டும்.

இந்த எல்லா நியமங்களும் எப்படி பாலனம் செய்யப்படும். எதுவரை ஜனங்கள் இந்த நியமங்களின் பிரயோஜனங்களை யறிகிறதில்லையோ அதுவரை நியமங்களாவது, சட்டங்களாவது வீணே. சட்டங்களோ சில ஜனங்களுக்கு உபயோகப்படும். அதிகப்படியான ஜனங்கள் சட்டங்களை எதுவரை மதிக்கிறதில்லையோ அதுவரை அதன் பொருட்டு கொடுக்கப்படும் தண்டனை பிரயோஜனப்படாது.

இந்த சிக்ஷையின் பொருட்டு எழுதப்படிக்கத் தெரியவேண்டுமென்பது அவசியமில்லை. மாஜிக்லான்டர்ன் துவாரா அல்லது பிரசங்கங்களின் மூலமாய் மலங்களினால் ஏற்படும் கெடுதல்கள், அதனை எருவாய் உபயோகிப்பதால் உண்டாகும் லாபங்கள் இவைகளின் அறிவை உண்டுபண்ண வேண்டும். விநோதமான சாதனங்களைக் காண்பிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலான போதனை தானே நடந்து காட்டல் தான். இதையறிந்த ஜனங்கள் தாங்களாகவே இந்த குறைகளை அமுலுக்கு கொண்டுவந்து பிறருக்கு உதாரணம் காட்டல் வேண்டும்.

மோகன்தாஸ்கரம்சந்த்,
காந்தி.

நவஜீவனின் நிலை.

இந்திய நவஜீவன் பத்திரிகையைப் பற்றி மகாத்மா எழுதுவதாவது.

(காசியப்பர்.)

நவஜீவன் பத்திரிகை பணம் சம்பாதிப் ற்காக நடத்தப்படும் வியாபாரப் பத்திரிகை ல்ல. ஜனங்களுக்கு உற்சாகம் உண்டாவதற் காக கண்ட விஷயங்களை யெல்லாம் பிரசுரிக்கும் ஓர் வீண் பத்திரிகையல்ல. அது என்னுடைய எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் பிறர் அறிந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டு நடத்தப் படும் சாதனம். அதைக் கடன் வாங்கியும் நஷ்ட மடைந்தும் நடத்த முடியாது. விளம்பரங்களின் வரும்படியை எதிர்பார்த்தும் நடத்த முடியாது. அயலாரிடம் உதவி பெற்று இலவசமாகவும் நடத்த முடியாது. நவஜீவனுடைய வாசகர்களே அதன் சொந்தக்காரர்களென்று அறியவேண்டும். நவஜீவன் அதன் வாசகர்களுக்காகவே நான் நடத்தி வரும் வாரப் பத்திரிகையாயிருக்கிறது. அதன் எண்ணங்களும் அபிப்பிராயங்களும் எதுவரை வாசகர்களுக்கு திருப்தியைக் கொடுக்கிறதோ அதுவரை அதை ஆதரிக்கவேண்டியது அவர்கள் கடமை. ஏனெனில் பிரதி வாரமும் என் ஆத்மாவையே அதில் வைக்கிறேன். கெட்டதானாலும் நல்லதானாலும் எந்தப் த்திரிகை உள்ளது உள்ளபடி அதன் ஆசிரியன் ஆத்மாவை வெளிப்படுத்துகிறதோ, அப்பே ப்பட்ட பத்திரிகையைப் படிப்பதில் பொதுஜனகளுக்கு நன்மையுண்டாகுமென்றே நான் நம்புகிறேன். நவஜீவன் விலைமதிக்க முடியாத த்தியாக்கிரகத்தின் மார்க்கத்தைக் காட் சாதனமாயிருக்கிறது. இந்தத் தத்துதத்தின் உபயோகத்தின் உபயோகத்தைப் பொதுஜனங்களுக்கு எடுத்துக் காட்டும் பொருட்டே நான் உயிரோடு இருக்கிறேனென்று சொல்வேன். ஆனால் இது ஒரு திய வஸ்துவல்ல, புராதனமான வஸ் வாயிருந்தாலும் அதைப் புதிய பாஷை ல் புதிய மாதிரியாக விளக்கிக்கொண்டி க்கிறேனென்பது என்னுடைய உறுதி ான எண்ணம். சத்தியாக்கிரகத்தின் லமாகத்தான் சுயராஜ்ஜியம் கிடைக்க டுமென்று நான் எண்ணுகிறேன். சுயராஜ் மென்பது நம்முடைய சுவாசம் அதா (மூச்சு) சுயராஜ்ஜியமென்பது நம்மி இல்லை. இதனால் நம்முடைய நிலைமை சம்விட முடியாமல் மூச்சடைத்து முக்காடிக் கொண்டிருப்பவன் அவ லைப் போலிருக்கிறது சத்தியாக் தின் மூலத்தத்துவங்களை ஜனங்களு கற்பித்து அதன்படி நடக்கச் செய்ய ானால் தேசத்தின்-உலகத்தின் விடுதலை வழி வெகு சுலபமாய்விடும். எனக்கு இது விஷயத்தில் பூரா நம்பிக்கையும் ஞானமும் உண்டு. ஒரு சமயம் அந்த மார்க்கத்தை பூராவும் எடுத்துக் காண்பிப்பதற்கு முன் நான் இந்தத் தேகத்தை விட்டுப் போனாலும் போய் விடலாம் அப்படிப் போய்விட்டாலும் அதனால் ஒன்றும் முழுகிப் போய்விடாது. நல்ல காரியங்கள் எவ்வளவு செய்கிறோமோ அவ்வளவுக்கும் பலனுண்டு என்பது என்னுடைய உறுதி. இப் பேர்ப்பட்ட சத்தியாக்கிரகம் கைராட்டினத்தின் உதவியில்லாமல் நடத்த முடியாது. பசியால் இறந்து கொண்டிருக்கும் ஜனங்களுக்கு உணவுக்கு வழி தேடவேண்டும். நாம நமது நேரம் முழுமையையும், அவயவங்களின் உபயோக முழுமையையும் நாம் சரியாய் உபயோகப்படுத்திக் கொள்வதில்லை. அதனாலேயே நமக்கு (நம்மில் அநேகருக்கு) ஆகாரத்திற்கே வழியில்லாமற் போய் விடுகிறது. வருஷத்தில் நான்கு மாதம் அதாவது ஜனங்களுக்கு உள்ள நேரத்தில் மூன்றிலொரு பாகம் ஜனங்களுக்கு சோம்பேறித்தனத்தால் உபயோகமில்லாமற்போய்விடுகிறது. இம்மாதிரி சோம்பேறித்தனத்தால் கழியும் வீண்நேரத்தால் தான் ஜனங்களுக்கு சுயராஜ்ஜியம் இல்லாமற் போய்விடுகிறது. சுயராஜ்ஜியத்தின் முக்கிய தத்துவமாகிய பசியை நிவர்த்திப்பதற்கு ஒப்பற்ற ஒரே சாதனம் கைராட்டினந்தான். ஒரு துளி மழை ஒரு பலனையும் தந்துவிடாது. பல துளி சேர்ந்து பூமி குளிர்ந்தால் தான் முளைக்கும் புதிய சக்தியை உண்டாக்கிறது. இதுபோலவே ஒரு ராட்டினம் ஒரு பயனும் தராதது போல் காணலாம். ஆனால் ராட்டினக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்தால் மழைத்துளிகளின் உபயோகத்தைப்போல் ஜீவன்களுக்கு பெரிய உதவியுண்டாகிறது. அல்லாமல் ஒரு துளி மழை பிரயோஜனமில்லை யென்று சொல்லுவதும், அகால மழையினாலும், அதிக மழையினாலும் கெடுதி ஏற்பட்டு விடுகிறதென்று சொல்வதும் ராட்டினத்திற்கு இல்லை. ஏனெனில் ஒரு ராட்டினம் வேலை செய்தாலும் ஒரு மனிதனுக்காவது பயனைத் தருகிறது. ராட்டினத்திற்கோ அகாலமென்பது கிடையாது. அதிக ராட்டினம் ஏற்படுவதனால் உண்டாகும் பலனை சொல்லவே முடியாது. ஆகையால் ஒரு ராட்டினம் சுற்றி என்ன பிரயோசனமென்று யாரும் பயப்படவேண்டியதில்லை. இக்காரணங்களால் நவஜீவன் ராட்டினத்திற்கு பிரதானமான இடங்கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அஃதில்லையானால் நவஜீவனுக்கு வேலையே இல்லை. கைராட்டினம் ஆத்ம சுத்திக்குப் பலமான சாதனம். ஆத்மசுத்திக்கு வேறு இரண்டாவது சாதனமும் இருக்கிறது நவஜீவன் அடிக்கடி அந்தவிஜாரணையைத்தான் செய்து கொண்டிருக்கிறது. செய்து கொண்டும் இருக்கும். நவஜீவனின் எல்லாவிஷயங்களின் உத்தேசமும் ஆத்மசுத்தி, சுயராஜ்ஜியம், சத்தியாக்கிரகமுமாய்த் தானிருக்கும். மனிதனுக்கு உள்ளிருக்கும் சக்தியை வெளியாக்கி விருத்திசெய்து சுயராஜ்ஜியம் அடையச்செய்வது தான் நவஜீவனுடைய முக்கிய கருத்து. நவஜீவன் கேவலம் கிளர்ச்சியையோ, உற்சாகம் நிறைந்த வார்த்தைகளையோ வசகர்களுக்குக் கொடுக்கமுடியாது. ஏனெனில் அதனால் யாதொரு லாபமும் இல்லை. கேவலம் விஷயங்களைத் தர்க்கிப்பதும் அவைகளுக்குக் குறிப்புகள் எழுதுவதும் காலத்தை வீணாக்குவதாகும். குறிப்புகளுக்கும், தர்க்கங்களுக்கும் அவசியமேற்படாமல் அப்பொழுது மாத்திரம் அவைகள் பிரகாசிக்கும். நவஜீவனில் இங்கிலீஷ்காரர் மனதில் பயத்தையுண்டாக்கும்படி எழுதுவது என் சுபாவத்துக்கு விரோதமானது. இது என்னால் முடியாத காரியம் நானே இங்கிலீஷ்க்காரரை ப்ரேமையால் வெல்ல முயலுகிறேன். ஒரு சமயம் இந்தியா இங்கிலீஷ்க்காரருக்குப் பயத்தைக் கொடுக்கக்கூடிய மார்க்கத்தைக் கொண்டாலும் கொள்ளலாம் அப்படிக்கொள்ளவும் கூடும். ஆனால் அதன் பொருட்டு இந்தியாவுக்கு என் சகாயம் அவசியமில்லை. நான் எந்த ஆயுதங்களை உபயோகிக்கும் பொருட்டு யோசனை சொல்லுகிறேனோ, அவைகளுக்கெல்லாம் அன்பும் சத்தியமுமே மூலமாயிருக்கும். எனது யோசனையில் தவறுகள் இருக்கக்கூடும். ஆனால் அதன் உத்தேசங்களில் ஒருக்காலும் தவறு இருக்க முடியாது. இதுதான் நவஜீவன் சம்மந்தமாய் என்னுடைய நியமம்.

இந்தி நவ ஜீவன்.

தேவதாஸிகளின் மகாநாடு.

காக்கிநாடாவில் செப்டம்பர் மாதம் 30-ந் தேதியன்று நடந்தது. அதற்கு ஸ்ரீமான் புல்லையா என்பவருடன் ஸ்ரீமான். ஸி. எப். ஆண்ட்ரூஸ் சென்றார். அவரை அங்கு கூடியிருந்த ஸ்திரீகள் உற்சாகமாக வரவேற்றனர். ஸ்ரீமான் புல்லையா என்பவர் சானி வகுப்பைச் சேர்ந்தவர். ஆனால் பரிசுத்தமான இல்லற வாழ்க்கையை நடத்தி வருகின்றார். அவர் விபசாரிகளைத் தூய்மைப்படுத்த முயன்று வருகின்றார். ஸ்ரீமான், ஆண்ட்ரூஸ் அச்சகோதரிகளின் கூட்டத்தில் ஆங்கிலத்தில் பேசியதை ஸ்ரீமான். சாம்பமூர்த்தி தெலுங்கு பாஷையில் மொழிபெயர்த்துக் கூறினார்.

ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ்:—மகாத்மா இங்கு வந்துபோன பிறகு உங்களது நிலைமையைச் சீர்பெறச் செய்ய என்ன செய்யப்பட்டிருக்கின்றது.

சத்தியவதி :—யாமினி பூரணதிலக அம்மாள் எங்களது முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்து வருகிறாள். பிரசாரஞ் செய்யவும் தேவதாஸிகளது குலத்தைப் பரிசுத்தமுள்ளதாக்கி இக்குலச் சிறுமிகளை விவாகஞ்செய்துகொள்ளும்படி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அவர் ஒரு சங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்.

பிறகு மிஸ்டர் ஆண்ட்ரூஸ் அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பொதுஜன ஆதரவேற்படும்படி செய்வதற்கும் அவர்களது பிள்ளைகளைப் படிக்க வைக்கவும் சிறுமிகளை விவாகஞ்செய்து கொடுக்கவும வேண்டிய பணத்தைத் தேடிக் கொடுப்பதற்கும் தம்மால் இயன்ற முயற்சியனைத்தையும் செய்வதாக உறுதி மொழியளித்தார்.

ஒரு ஸ்திரீ:—எங்களுக்குக் கோயிலில் சேவை செய்வதற்காக மான்யம் விடுக்கப்பட்டது. அதற்காக கோயிலில் நர்த்தனஞ் செய்துவருகிறோம். இவ்வாறு செய்வதை தடுக்க ஏதேனும் வழி இருக்கின்றதா? இது சம்மந்தமாக ஏதேனும் உபாயம் செய்யக்கூடுமா?

ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் :— இக்கேள்வியை நான் மகாத்மாவை கேட்க விரும்புகிறேன் அவர் எனக்கு பதிலளிப்பார் என்று நம்புகிறேன். மகாத்மாவின் பிறந்த தினப்பரிசொன்றை உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். அஃதென்னவெனில் நீங்கள் இனி விபசாரத்தொழில் நடத்துவதற்காக எச்சிறுமியையும் ஸ்வீகரித்துக் கொள்வதில்லை என்று உறுதி கொண்டு பிரமாணஞ் செய்

து கொடுக்க வேண்டும். நீங்கள் அவ்வாறு பிரமாணஞ் செய்து கொடுத்தால் நாங்களும் உங்களுக்கு உதவுவதாக பிரமாணஞ் செய்து கொடுக்கிறோம்.

கூட்டத்திற்கு வந்திருந்த 30 ஸ்திரீகளில் சிலர் தாங்கள் அறியாமையால் இதுகாறும் பெண் குழந்தைகளை ஸ்வீகரித்து வந்ததாகவும், தற்பொழுது தங்களது வாழ்க்கை நிலைமையின் உண்மையை உணர்ந்து விட்டதால் இனி புதிதாக எவரையும் ஸ்வீகரிப்பதில்லை என்றும் கூறினர்.

ஸ்ரீமான் ஆண்ட்ருஸ்:— நீங்கள் பிரமாணம் செய்து விட்டுப்பின் மீறி நடக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் மகாத்மாவை கௌரவிப்பதாகாது.

பிறகு ஸ்திரீகள் தாங்கள் அளித்த வாக்கை நிறைவேற்றுவதாக உறுதி மொழியளித்தனர்.

அனுப்பபாளையம்.

திருப்பூரையடுத்த அனுப்பபாளையம் என்னும் கிராமத்திற்கு அவ்வூர் தேசபக்தர்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரும், ஸ்ரீமான் எஸ். ஏ. கணேச முதலியாரும், செப்டம்பர் மாதம் 30-ந்தேதி காலை 9 மணிக்கு விஜயமானார்கள். அன்றுமாலை காமாக்ஷியம்மன் மண்டபத்தில் ஓர் மகாநாடு கூட்டப்பெற்றது. இம்மகாநாட்டிற்கு, பண்டிதர் சொக்கநாதம் பிள்ளையவர்கள் அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமான் நாயக்கரவர்களுக்கு, யூனியன் பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீமான் முருகநாதம் செட்டியாரவர்களால், யூனியன் பஞ்சாயத்தார் சார்பாக ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் நாயக்கர், உபசாரப்பத்திரத்திற்கு பதிலளிக்குமுகத்தான் பேசியதின் சாரமாவது:—

ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகங்களில் பலவித ஊழல்களிருக்கின்றது. அவைகளை நிவர்த்தி செய்யவேண்டுமானால் தேர்தல்கள் ஒழுங்கான முறையில் நடைபெற வேண்டுமென்றும், தேர்தல் மனஸ்தாபத்தின் காரணமாகவே ஸ்தலஸ்தாபனங்களின் நடவடிக்கைகளில் கட்சி வேற்றுமைகளும், காரியக்கெடுதிகளும் ஏற்படுகின்றதென்றும் கூறியதுடன், இக்குறைகள் அகற்றப்பட வேண்டுமானாலும், பொது ஜனங்களின் வரிப்பணமானது முறையுடன் செலவழிக்கப்படவேண்டுமானாலும், நிர்வாகத்தை யோக்கியமாய் நடத்தக்கூடிய திறமைசாலிகளையே தெரிந்தெடுக்க வேண்டுமெனக் கூறினார். மற்றும், ஸ்தலஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் அரசியல கட்சிகளைப் புகவிடுவது, வேலைக்கே கெடுதியைத்தருமென்றும், இதை மகாத்மாவும் பலதடவைகளில் வற்புறுத்தியிருக்கின்றாரென்றும் சொன்னார்.

பின்னர், கதர், மதுபானம் தீண்டாமை முதலியவைகளைப்பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் கேட்போர் மனதில் உணர்ச்சி உண்டாகக்கூடியவாறு பேசியபின் காங்கிரஸைப்பற்றி ஸ்ரீமான் நாயக்கர் கூறியதின் சாரமாவது:—

காங்கிரஸைப்பற்றி நீங்கள் அதிகமாகக் கவலை கொள்ளவேண்டியதில்லை, ஒத்துழையாமைக் கொள்கைக் காங்கிரஸின்று எடுபட்ட பிறகு காங்கிரஸினால் படித்தவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகுட்டிகள் இரண்டொருவருக்கும் உத்தியோகம் கிடைக்கலாமே தவிர தேசத்திற்கு அதனால் ஒரு காரியமும் உண்டாகாதென்பது என்னுடைய அபிப்பிராயம். பழயபடி காங்கிரஸை ஒத்துழையாமை தர்மத்திற்குக் கொண்டு வர வேண்டுமானால் நாம் யாவரும் காங்கிரஸில் சேர்ந்து உழைப்பதற்கு அர்த்தமுண்டு. அப்படியின்றி யாரோ சில பிராமணர்களும் படித்தவர்களும் உத்தியோகத்திற்குப் போவதற்காக நாம் எல்லாரும் ஜெயிலுக்குப் போவது முட்டாள் தனமென்றே நினைக்கிறேன். இனி பொதுத் தொண்டு செய்பவர்களுக்கு நிர்மாணத்திட்டம் தான் முக்கியமானது. பாட்னா, அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி மீட்டிங்கில், நிர்மாண திட்டம் அடியோடு கைவிடப்பட்டுப் போய்விட்டது. காங்கிரஸின் பேரால் பொதுமக்களிடத்தில் பணம் வசூல் செய்யவும், அதை எலெக்ஷன்களுக்குச் செலவு செய்யவும் சுயராஜ்யக்கக்ஷியாருக்கு முழு அதிகாரமும் கொடுத்தாகி விட்டது. மகாத்மா அவர்களும் காங்கிரஸை வைத்துக்கொண்டிருப்பதால், நமக்கு ஒரு பிரயோஜனமில்லையென்று கருதி, கலக்கக்காரர்களிடமே ஒப்புவித்து விட்டார். நூல் நூற்கும் சங்கத்தில் தனது முழுகவனத்தையும் செலுத்தி வருகிறார். அதற்கு ஒவ்வொருவரும் தங்களான உதவியைச் செய்யவேண்டும எனப்பேசி முடித்தார்.

பின்பு திருப்பூர் ஸ்ரீமான் வெங்கடாசலம் பிள்ளையவர்களும் ஸ்ரீமான்கள் சே, ஆர். ஈஸ்வரமூர்த்திக் கவுண்டரவர்களும் முருகநாதன் செட்டியாரவர்களும் பேசி கூட்டம் முடிவடைந்தது.

பார்க்கவகுலச்சங்கம்.

(11-வது மகாநாடு, மாரண்டஹள்ளி.)

அன்புடையீர்,

கந்த மன்னர், மலைய மன்னர் சுருதி மன்னர் என்னும் தெய்வீக ராஜவம்சத்தினரின் 11வது மகாநாடு நிகழும் குரோதன-ஹு புரட்டாசி-மீ 27-28 தேதி (12-13-10-25) திங்கள் செவ்வாய் இந்தக்கிழமைகளில் தர்மபுரிக்கடுத்த மாரண்டஹள்ளியில் புதிதாக அமைக்கப்பெற்றிருக்கும் பந்தலில் நடை பெறும்.

அதுசமயம் திருக்கோவலூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் மா ரா. குமாரசாமி உடையாரவர்கள் அக்கிராசனம்வகித்தருளுவார்கள். இரண்டு தினங்களிலும் புலவர் பலரும் தேசியத்தலைவர்களும் உபந்நியாசிப்பார்கள்.

அன்று தாங்கள் நண்பர்களுடன் விஜயம் செய்து கண்டு கேட்டு இன்புறுமாறு வேண்டுகின்றனம்.

இங்ஙனம் தங்கள் வரவை அன்புடன் எதிர் பார்க்கும்:—

11-வது பார்க்கவகுல மகாநாட்டு உபசரணைச் சபையார்கள்.

மாரண்டஹள்ளி.

ஸ்ரீமான்கள். மிட்டாதார்.

பெ. சி. ஆறுமுக உடையார்
கே. ரத்தின உடையார்
ரங்கசாமி உடையார்

மிராஸ்தார்கள்.

வி. வரத உடையார்
ஆர். முனுசாமி உடையார்
எஸ். ஆறுமுக உடையார்
ஆதிமூல உடையார்
ஸி. செங்கோட உடையார்
நாராயண உடையார்
கே. ராமசாமி உடையார்
ஏ. ஆறுமுக உடையார்
மொட்டை உடையார்
கந்தசாமி உடையார்
சு. அப்பாவு உடையார்
குழந்தை உடையார்

மிட்டாதார்கள்.

கே. ரங்கசாமி உடையார்
கே. ராமலிங்க உடையார்
ஆர். பொன்னுசாமி உடையார்
ஸி. நாராயண உடையார்
வி. முனுசாமி உடையார்
வி. பொன்னுசாமி உடையார்
ஸ்ரீமதி. பார்வதியம்மாள் ஜமீன்தாரணி
எம். என். வெள்ளையப்ப உடையார் கர்ணம்
எம். பி. வெங்கிடாசல உடையார்
தர்மலிங்க உடையார்
எம். ஆர். வெங்கிடாசல உடையார்

நிகழ்ச்சி முறை.

முதல் நாள் (12—10—25) திங்கள்.

தேவாரம், கடவுள் வாழ்த்து
வரவேற்புப் பத்திரிகை வாசித்தல் முதலிய
"சைவசமயம்"
"இன்பவாழ்வு"
"சமரசம்"
"விருத்தகுமாரர் பாலரான படலம். முதலி
ன திருவாளர் சிவப்பிரகாசம் பிள்ளைய
களாலும், திரு. வி. கல்யாண சுந்தர மு
லியாரவர்களாலும், ஸ்ரீமதி ஞானப்பூங்கோ
தை யம்மாளவர்களாலும், திரு. ஈ. வெ
இராமஸ்வாமி நாயக்கர் அவர்களாலும்
முறையே பிரசங்கிக்கப்படும்.

இண்டாவது நாள் (3—10—25) செவ்வாய்

தேவாரம், கடவுள் வாழ்த்து
"மரபினர் மாண்பு"
"பெண்கல்வி"
"மாணிக்கவாசகர்"
"நன்னெறி"
"தமிழின் பெருமை"
"கதர்"

திருவாளர் மே. வே. துரைசாமி உடையா
ரவர்களாலும், ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாளவ
களாலும், ஸ்ரீமதி பூங்கோதையம்மாளவ
களாலும், திரு. பொன் அரங்க முதலிய
ரவர்களாலும், திருவாளர் திரு. வி. கல்
யாண சுந்தர முதலியாரவர்களாலும், திரு
ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கரவர்களாலு
முறையே பிரசங்கிக்கப்படும்.
தலைவர் முடிப்புரையுடன் கூட்டம் முடி
வுறும்.

விவேஷ கவ[illegible]ட்டு.

அபிநவ[illegible]
ஆங்கில போ[illegible]னி

இங்கிலீஷ் படிக்கவில்லையே எ[illegible]ற [illegible]லைவேண்டாம் தங்கள் சொந்த ஜோலிகளுக்கிடை[illegible]ன்[illegible] பொது ஜனங்கள் யாவரும இங்கிலீஷ பாஷை[illegible] [illegible]ட் பெயர், ஊர்ப் பெயர் முதலியவைகளையும் சகல வி[illegible]ரா[illegible] தந்தி விஷயங்களையும், லெட்டர்கள் மேல் விலாசங்[illegible]ர் எ[illegible]ழதும் விதங்களையும், இங்கிலீஷ் இலக்கணத்தின் மு[illegible]ியம[illegible]சங்களையும் அதி சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளக்கூடிய[illegible]ம், அனுபோகத்தில் பிரயோஜனமுள்ளதென்று பொது[illegible]னங்களால் போற்றப் படுகிற புஸ்தகமிதுவே. சென்ற 12 [illegible]வருஷங்களாய் ஆயிரக் கணக்கான புஸ்தகங்கள் செலவாய் இப்பொழுது 10-வது தடவை மறுபடியும் அச்சிட்டிருக்கி[illegible]றோம். புஸ்தகம் 1-க்கு விலை அணு **0—12—0** வி. பி. சா[illegible]ஜ் அணு **4.**

V. S. K. சுவாமி[illegible] அ[illegible]ஸன்ஸ்.
புக்ஸெல்லர்ஸ், விளாத்தி குளம்
Via கோயி[illegible]ல் பட்டி S. I. R.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினை[illegible]க்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சா[illegible]ஸ்திரம்

(ஓர் மானிட மர்[illegible]ம நூல்.

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்க[illegible]ும் அவர்களது மர்மஸ்தானங்களின் அமைப்பும், அவைகளி[illegible]ன் நேர்மையான உபயோகங்களும், இரதிமன்மத சிருங்கார [illegible]ஹாவபங்களும், புதியதம்பதிகளுக்கும் கல்யாணமாகாத சிறு[illegible]வர் சிறுமிகளுக்கும் இன்றியமையாததால் 50 படங்களுடன்[illegible] புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1(செலவுபிரத்தியேகம்)

மாணிக்க வி[illegible]லாசம் பிரஸ்,
அருணாச[illegible]ல முதலி வீதி, மதராஸ்.

இனாம்! உயர்ந்த பெரிய டேபில் கெடியாரம் இனாம்!!
ஓ "வேம்லி" ரிஜிஸ்டர் செய்த உயர்ந்த
பொன் நிப்புள்ள பவுண்டன்
பேனா 1-க்கு ரூ. 3-8-0

நமது கிங் ஜார்ஜ் இராஜாசரால் பரிசோதிக்கப்பட்டது.

500 நற்சாக்ஷி பத்திரங்கள் கொண்டது! இந்த பவுண்டன் பேனா ஆல்கனைட் சறையுள்ளதும், 14 காரட் (கோல்ட்) நிப்புள்ளதும், எழுத்துவேலைகள் சுரு சுருப்பாய் எழுதுவதற்கும் நெடுநாள் வரை உழைக்கக்கூடியதும் உயர்ந்த நிக்கல் கிளிப் புடன் பார்வைக்கு அதிக கெம்பீரமாயும், ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது, இப்பேனாவைப்போல் இதுவரையில் கண்டு இருக்கமாட்டீர்கள் எனக்கருதவும். மேற்படி பேனா 1-க்கு ரூபா 3-8-0க்கு வாங்குவோர்க்கு பெரிய டேபில் டைம்பீஸ் இலவசமாய் தரப்படும். இரண்டு பேனா ரூ. 7-க்கு வாங்குவோருக்கு 18 காரட் ரோல்டு கோல்டு பூவேலை செதுக்கிய உன்னத பாக்கட் கெடியாரம் இலவசமாய் தரப்படும். ஷை டேபில் டயம்பீஸ் தனிவிலை ரூ. 4-8-0 ஷை பாக்கட் கெடியாரம் தனியாய்விலை ரூ. 8-8-0. கெடியாரங்களுக்கு 5 வருஷம் காரண்டியுடன் அனுப்பிக்கப்படும். தருவித்து திருப்தியில்லாதவர்கள் திருப்பியனுப்பி தங்கள் பணத்தை வாப்பீஸ் பெறலாம்.

ஓ. எம். வி. கம்பெனி,
(23-பீட்) மதராஸ். கு

"தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13. வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

28 வருடங்கள[illegible]ாய் உலகப்பிரசித்திபெற்ற
வைத்ய[illegible]ரத்ன பண்டிட்

D. கோபாலா[illegible]சார்லு அவர்களின்

திவ்ய[illegible] அவுஷதங்கள்.

காலரா அவுஷத[illegible]ங்கள் ப்ளேக் அவுஷதங்கள்

ஒருமுறை உபயோகித்தால் [illegible]விஷபேதியும், ப்ளேக்கும் பறந்தோடும்

ஜீ[illegible]வாம்ருதம்.

தேகபலம், மனோசக்தி[illegible] இந்த்ரிய புஷ்டியைக் கொடுத்து தேக வலிவை யளிக்கும் விலை ரூ. 3[illegible]4—0

ப்[illegible]ருகுடி.

எக்காரணத்திலுண்டா[illegible]ன [illegible] நஷ்டத்தையும், மேகவெட்டை முதலிய கொடோ வியாதிகளை அ[illegible]யொழிக்கும்.

புட்டி 1க்கு ரூபாய் 2—0—0

வி[illegible]த[illegible]மக[illegible]த்வஜ.

நபும்சகத்தை வேருடன் [illegible]து இந்திரிய புஷ்டி கொடுத்து வஜ்ரதேகிகளாகச் செய்யும்.

ஆ[illegible]ர்வேதாஸ்ரமம்.

கோ[illegible]விந்தப்ப நாய்க்கன் தெரு.
காந்திநகர், மதராஸ்,

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப்
பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற
லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்ச
மானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக்
கொடுத்தால் 32

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

உண்மையான கெட்டி

கதர். யானகதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள், காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி

ந. ராமசாமி

மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம், திருப்பூர்

வந்தேமாதரம்.

கரூர் சு... கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்... போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோ...டை நாணயத்திலும் சேவை அழுத்தத்திலும் நீடித்து உ...கக்...டியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவ...வெள்ளை பீஸ்கள். ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் ...போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வால ...ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,

ரா...விலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம் (தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி)

ஸ்ரீமான் எஸ். ராமசாமி அ...யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்..

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,

காரியதரிசி கத்தர், இலாகா.

ஸ்தம்பனவடி.

இந்திரிய ஸ்கலிதத்திற்கு 3 நாளில் குணம் கொடுத்து தேகத்துக்கு பலத்தையும் ஜீரணசக்தியையும் தாது புஷ்டியையும் உண்டு பண்ணும்.

25 மாத்திரை ரூ. 2—0—0

Vydiapathy Kotta Jayaram Naidu,
Andra Ayurvedic Pharmacy Ltd,
159 Broadway, Madras.

இம்ப்ரூவ்ட் லீவர்

பாக்கெட் கெடியாரங்கள்.

ஓவர்லண்ட் பாக்கெட் கெடியாரம் நிக்கில் கூடு, தம்பு தூசி நுழையக் கூடாத மூடியுள்ளது. பிரத்யேகமாய் தருவித்த உயர்ந்த திக்கு கண்ணாடியுள்ளது. 6 லீவர்களுள்ளது. அழகான பெட்டியுடன் ஒரு சங்கிலியும் விலை ரூ. 8—12—0.

பெஸ்ட் பேடண்டு லீவர் வாட்சு விலை ரூ. 4—12—0

(Fido) பிடோ லீவர் கெடிகாரம் சிறிய ரூபம். மிக்க உறுதியானது, அழகுள்ள நிக்கல் கேஸில் அமைந்தது. நேர்த்தியான உறுதியுள்ள அமைப்புள்ளது. உத்திரவாதமுள்ள, டெஸ்டு செய்த எங்கள் சாமான்களை வாங்குங்கள். எங்கள் நாணயமும் நம்பிக்கையுள்ளதுமான வர்த்தகஸ்தலத்தின் கியாதி ஒரு முறை பரீட்சித்தால் விளங்கும் தயவுசெய்து ஒரு முறை பரீட்சியுங்கள்.

ஜாலால் அண்டு சன்ஸ்,

வெஸ்டு அண்டு கெடியாரம் வியாபாரிகள்,

61, ராட்டன்பஜார், சென்னை.

கலியுகத்தில் ... 'ஓர் மகானின் மகிமை''

மகத்துவமுள் ...ா மகானால் கலியுக கற்பகமாக விளங்கும்,

''அரு...மையான மூலிகையும்''

''தாயத் ...என்னும் ரட்சையும்''

(எந்த மதஸ்தாக...ளும் உபயோகிக்கத் தக்கவை.)

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஆண் பெண் இருதாரத்...ார்களுக்கும் உண்டாகும் பலவித நோய்களும், பார...வ, தோஷங்களும், பலவித குஷ்டம், க்ஷயம், வலிப்...ு, இளைப்பு, பிரமை, பைத்தியம், வாத நோய்கள், பே...கசம்பந்த வியாதிகள், விஷத்தால் ஏற்படும் பலவித ...வியாதிகள் முதல் தீராதென்றெண்ணி சகலவிதமான ...வியாதிகளும், செய்வினைகளும் கவலைகளும் ஆச்ச...ரியமாகும்படி பூரணகுணமாகியிருப்பதையும்

நீண்டநாளாக புத்...ிரபாக்கியமில்லாதிருந்த அனேகருக்கு புத்திரபாக்...கியம் உண்டாயிருப்பதையும், அபாரமான காரியங்...கள் ஜெயம் வெற்றியடைந்திருப்பதையும் ஸ்பெஷல் ...தாயத் என்னும் (ரட்சையால்) கவலைகள் நீங்கி, ஒவ்...வொருக்கும் கோரிய காரியங்கள் நிறைவேறியிருப்...பதையும்,

இந்த நிய...க்ஷமே பார்க்கலாம்.

ஏராளமான சகலதே...த்தார்களின் நற்சாட்சிகளாலும் காணலாம்.

தங்கமெடலும், ...மிழ்வைத்திய சங்கத்தில்

அன்புள்ள ...நற்சாக்ஷியும் பெற்றவை.

...ாதர சகோதரிகளே!

கவ...னியுங்கள்!!

இந்த சமயத்தை ந...கவிடாதீர்கள். இதுவே நல்ல காலமாகும். வேண்டி...யவர்கள் உங்கள் முழுவிலாசத்தோடு எதற்காக தே...வையிருந்தபோதிலும் ஆரம்ப முதல் சரிவர விபரமெழுதி, பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து ...காயமுத்தூர்ஜில்லா மேட்டுப்பாளையம் ''பாலசந்திரன் ஆபீஸ்'' தலைவர் ஸ்ரீமான் எஸ். எ. (க. பிள்ளை...) அவர்களுக்கு எழுதிக்கொள் வீர்களானால் விபர...மான பதிலும், சகல விபரமும் அனுபந்தங்களும் கிடைக்கும்

எவ்...வித விய...ாதிகளுக்கும் பத்தியமில்லை.

எந்த ...தேசத்திய ஸ்டாம்புகளும் அனுப்பலாம்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வே. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.